உ

சிவமயம்

திருச்செந்திலாண்டவன் துணை

குமரகுருபரன்

மலர் 19 || கீலக ௵ சித்திரைத் திங்கள் 1-ம் உ [13-4-68] || இதழ்-4

நீதிநெறி விளக்கம்

(கட்டுரை 17)

தொண்டைமண்டலாதீனம் மகாசந்நிதானம்
சீலஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக சுவாமிகள் அவர்கள்
ஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக சுவாமிகள் மடாலயம்,
காஞ்சிபுரம்.

ஆக்கம் பெரியார் சிறியா ரிடைப்பட்ட
மீச்செலவு காணின் நனிதாழ்ப - தூக்கின்
மெலியது மேன்மே லெழச்செல்லச் செல்ல
வலிதன்றே தாழுந் துலேக்கு. (17)

ஆக்கம் பெரியார்-பெரிய செல்வர், சிறியாரிடைப்பட்ட-அற்பரிடத்திலே தோன்றிய, மீச்செலவு – மிக்கபோக்கை, காணின்–கண்டால் (அறிந்தால்), நனிதாழ்ப - மிகப் பணிந்திருப்பர் (அடங்கியிருப்பர்), துலேக்கு - துலாக்கோலில் (இங்குத் தராசு எனப்படும் இருதட்டுடையதே கொள்ளப்படும்,

ஒரு தட்டுடைய துலாக்கோலைக் கொள்ளல் பொருந்தாது.), மெலியது-பொருள் மிகப்பெருத தட்டு (கனம் இல்லாதது), மேல்மேல் - மேலேமேலே, எழ - ஓங்க, செல்லச்செல்ல - போகப்போக (உயரஉயர), வலியது அன்றே தாழும் - பொருள்மிகப்பெற்ற தட்டுத்தானே தாழ்ந்திருக்கும்.!

மெலியது வலியது என எதுகை நயம் பொருந்திய நிலை கெட வலிது என்ற பாடமே பிறர்கொண்டுளர். ஆசிரியர் எதுகை மோனை முதலியவற்றை அமைக்கும் கருத்துடையவர் என்பதும், அக்கருத்துக்கு முற்றும் இடங்கொடாதவர் என்பதும், சங்ககாலச் சான்றோர் செய்யுள் போலச் செந்தொடையிற்றொடுக்கும் ஆற்றல் சான்றவர் என்பதும் (சிதம்பரச்) செய்யுட்கோவை பாடியருளிய மஹாகவி என்பதும் இக் **காலக் கவிகளுக்கு அவர் சிறிதும் ஒப்பாகார் என்னும் உயர்வேயுடையவரென்பதும் எவர்க்குத் தெரியாதன?**

ஆக்கம் :— ஆக்கு + அம் = ஆக்கம். நோக்கு + அம் நோக்கம். ஆக்கம் பிறவினையில் இவ்வாருயிற்று. தன்வினையிலும் ஆகு + அம் = ஆக்கம் என இவ்வடிவேயுறும். வீங்கு + அம் = வீக்கம். தேங்கு + அம் = தேக்கம். தூங்கு + அம் = தூக்கம் என்பனவும் அவைபோல்வனவும் அடங்கு + அம் = அடக்கம், நெருங்கு + அம் = நெருக்கம், பழகு + அம் = பழக்கம், குறுகு + அம் = குறுக்கம் என்பனவும் அவைபோல்வனவும் தமிழறிஞர் உணர்ந்து கொள்வர். சுருக்கம், உறக்கம், இயக்கம், விலக்கம், விளக்கம், ஏக்கம், பாக்கம் முதலியவை இங்குக்காட்டியவற்றுள் அடங்குமாறுணர்தல் எளிதே. ஆ-பகுதி, கு-சாரியை எனின், ஆகிய என்றதிலும் அச் சாரியை கொள்ளப்படுமோ? 'ஆ' ஆகு என இருவேறு முதனிலையுண்டு. போ, போகு என்பனவும் அன்ன.

பெரியார் என்பது பெருமையென்னும் பண்படியாகத் தோன்றியபெயர். சிறியார் என்பது சிறுமையென்னும் பண்படியாகத் தோன்றிய பெயர். அண்மையில் மறைந்த அறிஞர் ஒருவர் பெரியார் சிரியார் என்றிருத்தல் வேண்டும் என்றும் பெருமை என்பது பெறுமை என்றும் சிறுமை சிருமை என்றும் இருத்தல்வேண்டும் என்றும் இக்காஞ்சிப் பெரு

விழாச்சொற்பொழிவில் வெளியிட்டார். திருநாவுக்கரசர் திருத்தாண்டகத்திலே 'நிலாவாத புலாலுடம்பு' என்றதில் நிலவாத என்றே இருத்தல் வேண்டும் என்று திருத்தம் கூறினர். அறிஞர்பற்பலர் செய்துவரும் சொல்லாராய்ச்சிகளை, நம் அறிவு சென்ற அளவும் செலுத்தி நோக்கி ஒரு முடிபுக்கு வரமுடியவில்லை. 'இசைவுலகு' இசையுலகு என்னும் இரு தொடரும் ஒரு பொருளவாகக் கொள்ளும் பேரறிஞர் மிக்க உலகில் உண்மையறிஞர் மதிப்புறுதல் எங்ஙனே கூடும்? இத் தகுபுல்மை "வந்த வாறெங்ஙனே போமாறேதோ மாயமாம் இதற்கேதும் மகிழவேண்டா."

சிறியாரிடைப்பட்ட மீச்செலவைப் பெரியார்காணின் என்று கொள்ளத்தக்கதைப் பெரியார்க்கும் சிறியார்க்கும் இடைப்பட்ட மீச்செலவு என்று கொண்டுரைத்தாலும் நன்றெென இக்காலத்திலே ஆராய்ச்சியிற் சிறந்துவிளங்கும். 'மீச்செலவு' என்பது மீக்கோள், மீப்போர்வை என்பனபோல மெய்க்குரியது. 'மீக்கூற்று' என்பது மொழிக்குரியது, உளத் துக்குரியதாயொன்றிருத்தல் வேண்டும். உளம் மொழி மெய் (மனவாக்குக்காயம்) மூன்றன் தொழிலா நின்றவாறு காண்க. பழம்புலவர் ஒருவர், "மீச்செலவு - தமக்குரிய அளவு கடந்து சொல்லினுஞ் செயலினும் மேலே போதல்." என்றெழுதினர். அவர் சொல்லினும் மீச்செலவு செயலினும் மீச்செலவு எனக் கொண்டுரைத்தார். "**வெங்கட்டயித்தியர் உடற்குறை தலைக் குறை விரைந்துயிரினைத் தொடர்ந்து மீச்செல்லுமாச் செல்லெனச் செல**" என்னும் இடத்தில் உடலின் செயலாகவே **குமரகுரு பர முநிவர்** அருளியவாறு அறிக. மீச்செல்வன உடற் குறை யும் தலைக்குறையும்.

மிகுசெலவு, மிகுகூற்று, மிகுதானம், மிசை மிசை என வருஞ்சொற்றொடர்களில் முதலில் நின்ற இருகுறிலும் ஒரு நெடிலாகி மீச்செலவு, மீக்கூற்று, மீதானம், மீமிசை என மருவின. "தற்சுட்டளபொழிஐம் மூவழியும் நையும்." மிகு + ஐ = மிகை. அளவிற்குட்படாது மிகுதல். மிகல் என்பதன் மரூஉவே மேல் என்பது. இதுபோல மருவிய சொற்கள் பலஉள. இயல் - ஏல். எனில் - ஏல். அகல் - ஆல். இயற்

கையெனவே என்பதே. ஏற்கெனவே ஏற்கனவேஎனவழங்குகின்றது. நிகர் – நேர். "உறுவது சீர்தூக்கும் நட்பும் பெறுவது கொள்வாரும் கள்வருநேர்." என்னுங் குறட்பாவையும் அதனுரையும் நோக்குக. பெயர் - பேர். அகழ்-ஆழ்.

கந்தர்கலிவெண்பாவிலே, "பேரின்ப வெள்ளப்பெருக்காறு மீதானம் தேரின்பம் நல்கும் திருநாடு" என்ற கண்ணியில், மிகுதானம் என்னும் தொல்லுருவம் புலப்பட மேலான இடம் எனப் பொருளுரைத்தது நம் தமிழ்த் தெய்வத்தின் பழம் பெரும் புலமைச்சிறப்புக்கே யுரிய திறத்தை நினைப்பிப்பதாகும். மிகு - மிகல் - மேல் என்னும் முறைமையில் அதனியல்பை ஆய்ந்துணர்தல் அறிஞர் கடனாகும்.

"ஆதாரத் தாலே நிராதாரத் தேசென்று
மீதானத் தேசெல்க வுந்திபற
விமலற் கிடமதன் றுந்திபற."

எனவும்

"ஆதார யோகம் நிராதார யோகம்என
மீதானத் தெய்தும் விதியிரண்டே"

எனவும் சைவசித்தாந்த ஞானசாத்திரத்திலே அத்தகைய மீதானம் உணர்த்தப்பட்டது. திருவள்ளுவரும் மிசைநிலம் என்னும் அதனை ஒருதிறம் குறித்து மாற்றி 'நிலமிசை' என்றும் அப்பொருளைப் புலப்படுத்தி 'வரன்என்னும் வைப்பு' என்றும் உணர்த்தியருளினர். ஆக்கம்:— நன்றுந்தீதும் ஆவன எல்லாம் ஆக்கம் எனப்படும். படினும் செல்வத்திற்கே சிறப்பு வழக்காயுளது அச்சொல். 'ஆக்கமும் கேடும் அதனால் வருதலாற் காத்தோம்பல் சொல்லின்கட் சோர்வு' என்னுந் திருக்குறள், அச்சொல்லின் பொதுப்பொருளை உணர்த்துகின்றது.

"செம்மல ராளொடு நாமகள் தேவி
கைம்மலர் பற்றின கல்வியொ டாக்கம்
இம்மையி லேபெறு வார்க்கிது போதென்
றம்மணி நூபுரம் ஆர்ப்ப நடந்தாள்"

என அங்கயற் கண்ணியம்மை திருமணப்படலத்து செய்யுளில், நாமகள் தேவி நல்குங் கல்வியொடு செம்மலராள் செய்யும் அருளாகிய ஆக்கத்தையும் (சிறப்புப்பொருள் ஆய)

செல்வத்தையும் உணர்த்துகின்றது. "ஆக்கம்கெடுவதுளதெனினும் அஞ்சுபவோ வாக்கின்பயன் கொள்பவர்" (நீதிநெறி விளக்கம். 69). இந் நீதிநெறிவிளக்கச் செய்யுளில், 'ஆக்கம்' என்பது செல்வத்தை மட்டும் உணர்த்தியதன்று, முற்செய்யுளில், "கல்வியுடைமை பொருளுடைமை என்றிரண்டு செல்வமும் செல்வம் எனப்படும்" ஆதலின், அவ்வீராக்கமும் இதிற்கொள்ளல்தகும். தகவே, ஆக்கம் பெரியார் என்றதற்குப் பெருங்கல்வியர் பெருஞ்செல்வந்தர் எனப் பொருளுரைத்தல் வேண்டும். ஆக்கஞ்சிறியார் - அவ்வீராக்கத்திலுஞ் சிறுமையுடையவர், சிறிதுகல்வியும் சிறிதுசெல்வமும் பெற்றவர். **அற்பவித்தையும் அற்பதநமும்** உள்ளவர். அற்பத்தனம் வேறு அற்பதநம் வேறு. தமிழ்த் தெய்வத்தின் குறிப்புரையில் ஆக்கம் என்றதற்கு அறிவின் அமைதி என்று கருதி அறிவின் அமைதியிற் பெரியார் எனவும் (சிறியார் -) அறிவில்லாதவர் எனவும் பொருள்கொண்டமை புலனாகும். கல்வி செல்வம் இரண்டும் பழவினைப்பயனாற் பெறற் பாலன. அவற்றைப் பெற்றோர் எல்லாரும் பெரியோராகவோ சிறியோராகவோ இருக்கலாம். அவ்விருதிறத்தவருள் ஒருதிறத்தவராகவே இருத்தல் வேண்டும் நியதியில்லை. அச்செல்வங்களைப் பெருங்காலத்திலே சிறியராயிருந்து, பின்னர் அறிவின் அமைதியாற் பெரியராதலும், அஃது இன்மையாற் பண்டைப் பெரியர் சிறியராதலும் உலகியற்கையே. "சிறியரேமதிக்கும் இந்தச் செல்வம் வந்து உற்றகாலை வறியபுன்செருக்கு மூடிவாயுளார் மூகராவர், பறியணிசெவியுளாரும் பயில்தருசெவிடராவர், குறிபெறுகண்ணுளாரும் குருடராய் முடிவர்". குசேலர் முதலோர் இத்தகையர் அல்லராய் விளங்கினர்.

அறிவினமைதியிற் பெரியர், அதிற்சிறியர் எனக்கருதிப் பொருளுரைக்கச்செய்யும் அக்குறிப்புரையும் பொருந்துவதே. உலகில் அவ்வறிவினமைதியில்லாத புலவரும் பொருளரும் அதிற்சிறியாரிடைப்பட்ட மீச்செலவைக்கண்டு தாழ்தலேயாண்டுமில்லை. நனிதாழ்தல் எங்கு அமையும்? கல்வியும் செல்வமும் பெருகினும் அறிவின்அமைதி இன்றியமையாதது. அமைதியின்றேல் தாழ்தலும் அத்தாழ்தலில் மிகுதலும் உளவாகா. அவ்வாற்றால் அக்குறிப்புரை சிறப்புடையதே. ஓர்

உயர்பள்ளித் தலைமைத் தமிழாசானாக இருக்கும் சிற்றுக்கத்தினார், பேராக்கத்தினார்க்கு நிகழ்ந்த திருவரவேற்பில், 'சீ' என்று எழுதி இகழ்ச்சியில் இறங்கினார். அப்போது 'சீ' என்றெழுதிய மீச்செலவைக்கண்ட பெரியார் நனிதாழ்ந்து அவையில் விளங்கினார். நற்புலமைக்கும் தன் பிறவிப் பண்புக்கும் சம்பந்தம் இல்லையேல், பெற்ற ஆக்கம் அறிவின் அமைதியை விளக்காது. அறிவோராதல் அரிதே. அதனினும் அரிது அறிவோர்க்குரிய அழகுபெறுதல். அறிவோர்க்கு அழகு கற்று உணர்ந்து அடங்கல். அடங்காமையே மீச்செலவுக்கு அடி. 'சீ' என்று இகழ்வோன் பல்வகை யிழிகுணங்களையுடையவனாக இருக்கலாம். அவ்விழிகுணங்களுள் ஒன்றனையே திருவள்ளுவர் மிகப்பெரிதாக்காட்டி, "இகழ்வார் முன்னெறுபோற்பீடு நடையில்"லை என்றார். குமரகுருமுனிவரர் இந்நூலிலே வேறு பாடலாகத்,

> "தீய செயற்செய்வார் ஆக்கம் பெருகினும்
> தீயன தீயனவே வேறல்ல—தீயன
> நல்லன ஆகாவாம் நாவின் புறநக்கிக்
> கொல்லுங் கவயமாப் போல்."

என்றருளினார். இங்கே 'ஆக்கம்' அமையும் தன்மையை அதனைத்தேடுவார் தன்மையின் காரியமாயும் அவ்வியநெஞ்சத்தான் ஆக்கமாயும் அறிக.

> "கற்புடுத் தன்பு முடித்துநாண் மெய்ப்பூசி
> நற்குண நற்செய்கை பூண்டாட்கு—மக்கட்பே
> றென்பதோர் ஆக்கமும் உண்டாயின் இல்அன்றே
> கொண்டாற்குச் செய்தவம் வேறு."

(நீதிநெறிவிளக்கம். 81)

இதில் மக்கட்பேறு ஆகிய சிறப்புப்பொருளைக் குறித்து '**ஆக்கம்**' என்னும் பெயர்ச் சொல்லாட்சி அமைந்துளது. இவ்வாக்கமும் 'கடும்பகல் ஏதிலான்பாற்கண்ட இல்லினுக்குப் பிறந்ததேல், நெடும்பகற்கற்றுணர்ந்தும் அவையத்துதவாத கல்வி போலப் பொல்லாத ஆக்கமேயாகும். கற்றுத்துறை போய காதலற்குக் கற்பினாள் பெற்றுக் கொடுத்த தலைமகன் ஆயின், முற்றத் துறந்தார்க்கு மெய்யுணர்வில் தோன்றும் இன்பம் போலும் தலையாய ஆக்கமாகும்,

நீதிநெறிவிளக்கத்து நூற்றுவது வெண்பாவாகிய இதனைப் பெருந்தொகையிற் பக்கம் எண்பதிலே, '**அடையாற்றுப்புத்தக சாலைத்திருக்குறளேட்டிற்கண்டபாட்டு**' என்று அடிக்குறிப்பில் எழுதினர். 542 ஆவது பக்கத்திலே "காதலற்குக் கற்பினு ளிடமாகப் பெருமகன் தோன்றுவது போலத் துறந்தார்க்கு மெய்யுணர்வினிடமாக இன்பம் தோன்றும் என்பது கருத்து. இறந்தவெலாம் - இவ்வின்பமல்லாத பிறவின்பம் யாவும்" எனவும் எழுதினர். ஈரிடத்திலும் நீதிநெறிவிளக்கத்தில் இஃ துள்ளது எனக் குறிக்காமல் விட்டதற்குக் காரணம் என் னையோ? அதனுற் பல நினைப்பிற்றேன்றுகின்றன. அவர் காட்டிய இச்செய்யுள்,

> **"கற்றுத் துறைபோய காதலற்குக் கற்பினுள்**
> **பெற்றுக் கொடுத்த பெருமகன்போல் முற்றத்**
> **துறந்தார்க்கு மெய்யுணர்வு தோற்றுவதே யின்பம்**
> **இறந்தவெலாம் துன்பமலா தில்."**

என்றுள்ளது. நீதிநெறிவிளக்கப் பதிப்புக்கள் பலவற்றுள், 'பெருமகன்' என்றும் 'மெய்யுணர்வு தோற்றுவதே' என்றும் இல்லை. '**தலைமகன்**' '**மெய்யுணர்விற் றேன்றுவதே**' என்றே இருக்கின்றன. தி. சு. செல்வக் கேசவராய முதலியார், 'இறந்தவெலாந் துன்பமேயாம்' எனவும் பாடம் உண்டு, என்றெழுதினர். சி. வை. தாமோதரம் பிள்ளை, 'மெய்யுணர் விற்றேன்றும் நலத்தின்பம்' என்று பாடங்கொண்டார்.

'மீச்செலவு' என்பதற்குக் 'கர்வம்' என்றூர் ஒருவர். அதுபொருந்தாது. கருத்து(ப்பொருளு)ம் ஆகாது. மனத் தின் மிகையும், வாக்கின்மிகையும், காயத்தின் மிகையும், அறி வின் மிகையும் தத்தம் எல்லைகடந்தன ஆயின், அவை 'கர்வம்' காரணமாகத் தோன்றியன ஆகும். காரணம் ஒன்றுய்க் காரி யம் பலவாய் நிகழுங்கால், அக்காரணத்தை யுணர்த்துஞ்சொல் ஒருகாரியத்தைமட்டும் உணர்த்தி நில்லாது. எல்லாக் காரியங் களையுமே உணர்த்தும். 'ஆக்கம்' திருக்குறளிற்பல பொருளில் ஆளப்பட்டுள்ளசொல்.

மீச்செலவு, மீக்கூற்று என்பவற்றுள் மீக்கூற்று நல்ல பொருளிலும் ஆளப்படும்,

(அ) 'தொல்லிசையான் மீக்கூறும்
கொற்கையார் குலவேறே'"

(ஆ) 'காட்சிக்கெளியன் கடுஞ்சொல்லன் அல்லனேல்
மீக்கூறும் மன்னன் நிலம்'

என்னுமிடங்களில் உயர்த்துக்கூறும் எனப்பொருள் கொள்வதே மரபு. "மீக்கூறுதல் இவன் காக்கின்ற நாடு பசி பிணி பகை முதலிய இன்றி யாவர்க்கும் பேரின்பம் தருதலின் தேவருலகினும் நன்று என்றல்" என்பது பரிமேலழகர் உரை.

மிகுதி - மனச்செருக்கு (158), வேண்டாத செய்கை (784), "பழியும் பாவமும் தரும் செய்கை துன்பமே பயத்தலான் வேண்டப்படுவது அன்மையின் அதனை மிகுதியென்றும் கூறினர்." (பரிமேலழகர்). **'உடம்பும் மிகை'** (345) **'மிகைநாடி'** (504) என்னுமிடங்களில் மிகுதற்பொருட்டன்றி வேறில்லை. **'காராண்மை மீயாட்சி'** என்ற கல்வெட்டுத் தொடரும் நற்பொருளது.

இவ்வெண்பாப் பொருளை மறவாமல் இக்காலத்திலே நனிதாழ்ந்திருப்பதே பெரியார் கடனாகும். பெரியாரெல்லாம் தாழ்ந்தே யிருக்கின்றனர். உலகம் தாழ்ந்து கெடுவதற்கு வேறுகாரணம் வேண்டுமோ? **உலகிற்பெரியோரிலரேல் உலகம் அழிந்தேவிடும்:**

பண்டுபோலத் திருக்கோயில் களிலும் வைதிகர் வாழ்விடங்களிலும் வேள்விகள் நிகழ்தல் வேண்டும். வேதமுழக்கம் பல்கவேண்டும். எல்லாச் சாதியாருள்ளும் தந்தம் மதாசாரங்கள் தவறுதவர்கள் பெருகிவரவேண்டும். நாயன்மார்களும் ஆழ்வார்களும் அருளிச் செய்தவற்றைக் கற்றல் வேண்டும், வடமொழிச் சமயநூல்களும் வேதாகமங்களும் உபநிடதங்களும் கற்பிக்க அங்கங்குக் கல்விச்சாலைகள் நிறுவுதல் வேண்டும். அவற்றிற் கற்பவர்க்குக் குறைவின்றி வாழ வழிசெய்தல் வேண்டும். அவர்கள் மழைபெய்யக் காரணமான வேதாகம வேள்விகளைச் செய்தல் முதலியவற்றிலே தம் ஆயுட்காலத்தைக் கழிக்கவேண்டும். எல்லாப்பள்ளிகளிலும் மதபோதனை அமையவேண்டும். இவற்றை இப்போதுள்ள

(தொடர்ச்சி அடுத்த பக்கம்)

திருமந்திரம் TIRUMANTIRAM

ஆறுந்தந்திரம் Tantra the Sixth

டாக்டர், திரு. பா. நடராசன் அவர்கள் M. A., D. Litt.,

(மலர் 19. இதழ் 3-ன் தொடர்ச்சி)

குருவின் அருட்செயல்கள் சொல்லொணு
Guru's acts of grace are beyond description

24. இதயத்தும் நாட்டத்தும் என்றன் சிரத்தும்
பதிவித்த பாதப் பராபரன் நந்தி
கதிவைத்த வாறும் மெய்காட் டியவாறும்
விதிவைத்த வாறும் விளம்ப வொண்ணுதே.

Into my bosom, on my eyes, over my head
He gently planted his loving feet
— Nandi, my Lord Supreme — ;
He laid me the Path,
He showed me the Truth,
He settled the course of my Destiny
Truly, truly, all that I cannot describe.

என் இதயத்துள்ளும், கண்மீதும், தலைமேலும் நந்தியெம் பெருமான் தன் அருட்பாதங்களைப் பதிவித்து, எனக்கு நெறி இதென்றும், உண்மை இதென்றும், இலட்சியம் இதென்றும் அவன் காட்டியருளிய விதத்தை என்னுல் விரிக்க இயலாதே.

(முன்பக்கத் தொடர்ச்சி)

தமிழக அரசு கடைப்பிடித்தால், உணவு முதலிய யாவும் குறைவிலாது கிடைத்து வாழவும் பிரஜோத்பத்தியை அறுப தாண்டிலும் பெருகாது தடுத்துக் குடும்பம் அக்ஷயம் உற்று இனிது வாழ்ந்துவிளங்கும். ஆட்சி மாட்சியுறும், தாழ்ச்சி அடையாது, இத்திருமுறைக்கழக (தி. மு. க) ஆட்சி என்றும் வீழ்ச்சி அடையாது.

(தொடரும்)

நந்தி க்குரவன் பிறப்பினை ஒழித்தான்
Preceptor Nandi ended my birth-cycle

25. திருவடி வைத்தென் சிரத்தருள் நோக்கிப்
பெருவடி வைத்தந்த பேர்நந்தி தன்னைக்
குருவடி விற்கண்ட கோனையெங் கோவைக்
கருவடி மாற்றிடக் கண்டு கொண்டேனே.

He placed his haloed feet on my head
He fixed his benign gaze on me.
And he granted me the Form Mighty,
He, mine Nandi Great
I saw him, my monarch, in Guru Form,
And saw the end of all births to come.

நந்தியெம்பெருமான் தன் திருவடிகளை என் உச்சிமீது பதித்து, அருள் நோக்கோடு பார்த்தான்; தெய்வீகப்பெரு வடிவினை எனக்குத் தந்தான்; அவன் தலைவன்; என் அரசன். அவனைக்குருவடிவில் நான் கண்டேன். அவன் என் கருவடி மறையக்கண்டான்.

திருவடி ஞான ச்சிறப்பு
The greatness of Gnana of the Holy Feet

26. திருவடி ஞானஞ் சிவமாக்கு விக்குந்
திருவடி ஞானஞ் சிவலோகஞ் சேர்க்குந்
திருவடி ஞானஞ் சிறைமல மீட்குந்
திருவடி ஞானமே திண்சித்தி முத்தியே.

The Gnana of the Holy Feet maketh you Siva,
The Gnana of the Holy Feet taketh to the world of Siva,
The Gnana of the Holy Feet freeth you from imprisoned impurities,
The Gnana of the Holy Feet is Siddhi and Mukhti too.

திருவடி தீட்சா ஞானம் சிவமாக்கும்; சிவலோகம் சேர்ப்பிக்கும்; மலச்சிறையினின்று மீட்பிக்கும்; திடமான சித்தியும் முத்தியும் அதுவே.

திருவடி வைத்தக்காலே மெய்ஞ்ஞானமுண்டு
True enlightement cometh only with the grace of Holy Feet

27. மேல் வைத்த வாறுசெய்யாவிடின் மேல்வினை
மால் வைத்த சிந்தையை மாயம தாக்கிடும்

பால் வைத்த சென்னிப் படரொளி வானவன்
தாள் வைத்த வாறு தரிப்பித்த வாறே.

Au the master blesseth thee not thus
With the grace of his feet on thine crown,
The Karma of yore shalt distort thine thoughts;
Only when the resplendent Lord of milk-white brow
- placeth his blessed feet on thee,
Only then art thou truly instructed.

மேலே விரித்தவாறு குருபரன் தன்திருவடியைச் சிரமீது வைத்து அருள் நல்காவிடின், முன்வினை மயக்கங்கொண்ட மனத்தைக் குழப்பிவிடும்-பால்போன்ற வெண்மை முகத்தைக் கொண்ட ஒளி மிகுந்த தேவனும் நந்தி தன் அருள் திருவடிகளை தலைமீது வைக்கும் போதே, ஞானம் உறுதிப்படுகின்றது.

குறிப்பு. வரி 4. *தரிப்பித்தல் – உறுதி ஞானம் கொளுத்துதல்.*

திருவடி சேர, ஆன்மா விடுதலை பெற்றது
The grace of Feet granted soul's liberation

28. கழலார் கமலத் திருவடி என்னும்
நிழல் சேரப் பெற்றேன் நெடுமால் அறியா
அழல் சேரும் அங்கியுள் ஆதிப் பிரானுங்
குழல் சேரும் என்னுயிர்க் கூடுங் குலைத்ததே.

I reached the cool glades of His triumphant lotus feet,
That standing as a pillar of flame,
Defied the grasp even of the godly Mal;
And there the First One Saw
The eternal denoument of my fleshly cage
That held my soul a hoary captive.

உறுதிமிகுந்த, அழகிய தாமரைபோன்ற, ஈசன் இணையடி நிழல் எய்தப்பெற்றேன். திருமால் போன்ற தேவரும் அடையப்பெறுதவை அவை; அழலுருவாக அவர்கட்கு நின்றது, நிழலுருவாக எனக்குத் தெளிந்தது. அத்தகைய திருவடிகளிலே என் ஆன்மாவைச் சிறைசெய்த இந்த உடலாகிய கூட்டை ஆதிப்பிரான் குலைத்துவிட்டான். ஆன்மா விடுதலையைப் பெற்றது.

குறிப்பு. வரி 4. *குழல் சேறும் – உள்ளே பொக்கையான எலும்புக் கூடாலாகிய உடம்பு. அதனை ஆன்மா என்றபுள்ளைச் சிறைவைக்கும் கூட்டினுக்கு உவமை கூறினார்.*

அடியின்பம் முடியின்பத்தினும் சிறந்தது
Grace of Feet exceedeth kingly greatness

29. முடி மன்னரா கின் மூவுலகம தாள்வ
ரடி மன்ன ரின்பத் தளவில்லை; கேட்கின்
முடி மன்ன ராய்நின்ற தேவர்க ளீசன்
குடி மன்ன ராய்க்குற்ற மற்றுநின்றாரே.

The crowned monarchs at best may sway the worlds three;
But they who reach'd His holy Feet,
— Their joy no bounds shall know;
Know ye this:
The heavenly beings attired in Kingly diadems
But turned his vassals;
And thus became for ever blemishless free.

முடி அரசர்கள் வேண்டுமானால் மூன்று உலகங்களை ஆளலாகும்: ஆனால் இறைவன் அடியை அடைந்தவர் பெறும் இன்பத்துக்கோ அளவில்லை. இதனைக் கேட்க முடி அரசர்களாய் விளங்கிய தேவர்கள் இறைவன் கீழே குடி அரசர்களானார்கள். அதன் பயனாய், மும் மல மற நின்றுவிளங்கினர்.

குறிப்பு, வரி 2, *அடிமன்னர் – அடியை மன்னியவர்கள், அல்லது பற்றியவர்கள்.*

4. *குடிமன்னர் - குடிமன்னர் ஈசனாகிய முடிமன்னனுக்கு வணக்கம் செய்வதாலே, அவன் திருவடிகள் அவர்கள் சிரத்தேபட; அருள்பெறுவாராயினர்.*

திருவடி உண்மையே வேதத்தினந்தம்
The Truth of the Hallowed Feet is the end of Vedas

30. வைத்தே னடிக்கண் மனத்தினுள் ளேநான்
பொய்த்தே யெரியும் புலன்வழி போகாம
லெய்த்தே னுழலு மிருவினை மாற்றிட்டு
மெய்த்தே னறிந்தேனவ் வேதத்தி னந்தமே.

I treasured His hallowed feet in the depths of my heart;
And so,
I shunned the deceitful course of the scorching senses,
I swam past the dangerous swirls of the twin Karma,
And I tasted the rectar of Truth
— The end of all Vedas.

இறைவன் திருவடிகளை என் மனக்கண்ணகத்தே பதித்தேன். அதன் பயனாக ஐம்புலத்தீய்க்கு இரையாகாது பிழைத்தேன்; இருவினைகளையும் வென்றேன். மெய்மைத் தேனைச் சுவைத்தேன். வேதத்தின் அந்தமது வெனக் கண்டேன்.

குறிப்பு. வரி-1. *மனக்கண்ணுள்ளே என்று கூட்டவும்.*

திருவடிகள் தூயவர் குறிக்கோள்
The Lord's Feet are the goal of the Pure

31. **அடிசார லாம் அண்ணல் பாதமிரண்டும்;**
முடிசார வைத்தனர் முன்னை முனிவர்;
படிசார்ந்த இன்பப் பழவடி ; வெள்ளக்
குடிசார் நெறிகூடி நிற்பவர் கொள்கையே.

The Lord's feet twain
Are like unto the gentle rain:
Them, the sages of yore bore full on their crown;
They are joyous and hoary, led up by stages;
And the goal of the pure tribe
That swarm in the Path of Truth.

இறைவன் பாதமிரண்டும் சாரல்மழை போன்ற குளிர்ந்த இன்பம் பயப்பவை; பண்டைய முனிவரெல்லாம் அவற்றை உச்சிமேற்கொண்டனர்; படிப்படியாகச் சென்றடைய வல்ல இன்பப்பழ அடிகள்: நன்னெறியிற் கூடிநின்ற தூய மக்கள் கூட்டத்தின் குறிக்கோளாய் அமைவன.

குறிப்பு வரி 1, *அடி சாரலாம் – சாரலடியாம்; பொதிகைமலையில் தங்கியவராகையாலே, ஆசிரியர் சாரலை உவமை கொண்ட நயம்காண்க.*

3. *படி சார்ந்த – சாலோகம், சாமீபம், சாரூபம், சாயுச்சியம் என்ற படிகளைக் கொண்ட.*

(தொடரும்)

சிதம்பர மும்மணிக்கோவை

உரைநடை

சிவஸ்ரீ தத்புருஷ தேசிகர்,
பாலகவி
திரு. வே. இராமநாதன் செட்டியார் அவர்கள்,
தேவகோட்டை.

(மலர் 19 இதழ் 3-ன் தொடர்ச்சி)

மன்றம் பொகுட்டா மதிலிதழா மாடங்கள்
துன்றும் புயல்கள் சுரும்பராப் – பொன்றங்கும்
நற்புண்ட ரீகமே ஒக்கும் நடராசன்
பொற்புண்ட ரீக புரம். 3

பொன்னம்பலம் நடுவிலேயுள்ள பொகுட்டாகவும், திருமதில்கள் அகவிதழ் புறவிதழ்களாகவும், மாடங்களிலே படிந்திருக்கும் மேகங்கள் வண்டுகளாகவும், நடராசப் பெருமானது பொன்மயமானப் புண்டரீகபுரம், திருமகள் தங்குகின்ற நல்ல தாமரைமலரை ஒத்திருக்கும்.

புரமொன் றிரண்டும் புகையழ லுண்ணப் புவனமுண்ணும்
சரமொன் றகிலம் சலிக்கவெய் தோய்சலி யாநடஞ்செய்
வரமொன் றிரண்டு மலர்த்தாளும் ஊன்றிற்றன் மாமகுடம்
பரமொன்று மென்றுகொல் லோகொண்ட வாவப் பதஞ்சலியே. 4

முப்புரங்களையும் புகையுடன் கூடிய நெருப்பு உண்ணும்படி, மண்ணையுண்ட திருமாலாகிய ஒப்பற்ற அம்பை அகில உலகங்களும் நடுங்குமாறு எய்தவனே! அந்தப்பதஞ்சலிமுனிவர், இரண்டு பூந்திருவடிகளையும் ஊன்றினால் ஆதிசேடனாகிய தனது பெரிய முடிகள் பாரத்தையடையுமென்று கருதியோ; சலியாது நடம்புரிகின்ற வரம் ஒன்றை ஒரு காலை மட்டும் ஊன்றி நிகழ்த்தும்படி கொண்டது?

சலியாது முயன்ற தவப்பெருந் தொண்டர்
பலநாள் ஓதிக் கலைமுற்றும் நிரம்பி
அளவையின் அளந்துகொண் டுத்தியில் தெளிந்து
செம்பொருள் இதுவெனத் தேறி அம்பலத்
தாரா அன்பினோ டகனமர்ந் திறைஞ்சிப்
பேரா இயற்கை பெற்றனர் யானே

சரியையிற் சரியாது கிரியையிற் றளராது
யோகத் துணங்கா தொண்பொருள் தூக்காது
வறிதே நின்திரு மன்றம் நோக்கிப்
பிறவா நன்னெறி பெற்றனன் அன்றே
முட்புறம் பொதிந்த நெட்டிலைக் கைதை
சுரிமுகப் பணிலமொடு சூலுளைக் துமிழ்ந்த
தரளம் வெண்மடல் தாங்குவ தம்ம
கருங்கழிக் கரையில் வெண்பொடி பூசி
இருந்தவம் உஞற்றியும் யாம்பெறற் கரிய
செஞ்சடைக் கிடந்த வெண்மதிக் கடவுள்
வருகவென் றழைத்துப் பெருநயப் பெய்திக்
கண்ணீர் வாரக் கலந்துடன் தழீஇ
உண்ணென வெண்சோ றேந்தித் தண்ணென
உடுக்கணத் தொடுமவ் வுடுபதிக் கடவுளை
மடற்றலைத் தாங்கி வைகுவது கடுக்கும்
நெய்தலொடு தழீஇய மருத வேலித்
தெய்வப் புலியூர் வைதிகக் கூத்த
பொன்னிறப் புறவும் கருநிறக் காக்கையும்
மன்னுமால் இமய வரைப்புறம் சேர்ந்துழி
இருநிறப் பறவைக்கும் ஒருநிறன் அல்லதை
நிறம்வேறு தெரிப்ப துண்டோ இறைவநின்
இன்னருள் பழுத்த சந்நிதி சேர்ந்துழி
இருவேம் பெற்றதும் ஒருபே றுகலின்
வேற்றுமை உளதோ இல்லை
ஆற்றல்சால் சிறப்பின் அனையரோ டெனக்கே. 5

சலிப்பில்லாமல் முயன்று முடிந்த தவத்தையுடைய பெரிய தொண்டர்கள் பலநாட்கள் ஓதிக் கலைகளெல்லாம் நிரம்பப்பெற்று, பிரமாணங்களால் அளந்து யுக்தியினுல் தெளிந்து செம்பொருள் இதுவென்று தேறித் திருச்சிற்றம் பலத்தில் குறையாத அன்புடன் மனம் பொருந்த வணங்கி மாறுபடாத சுத்தாத்துவித முத்தியைப் பெற்றுர்கள். யான் சரியை நெறியில் நடவாமலும், கிரியை நெறியில் தளராமலும், யோக நெறியில் வருந்தாமலும், ஞானம் வழங்குகின்ற ஒள்ளிய பொருளை ஆராயாமலும் யாதொரு குறிப்பும் இன்றி உனது திருமன்றத்தைத் தெரிசித்துப் பிறவாத பெருநெறியைப் பெற்றேன். முட்களைப் புறத்திலே கொண்ட நீண்ட இலைகளையுடைய தாழையானது சுழிந்த முகத்தையுடைய சங்குடன், அந்தச்சங்கு கரு முதிர்ந்து ஈன்ற முத்தையும் வெள்ளியமடலிலே தாங்குவது, கரிய கடற்கழிக் கரையில்

வெண்பொடியைப்பூசிப் பெருந்தவத்தைச் செய்தும் யாம் பெறுவதற்கு அரியதாயிருக்கின்ற செய்ய சடையிலே தங்கியுள்ள வெண்மதிக்கடவுளே! வருக என்று அழைத்துப் பெரு விருப்பம் கொண்டு, தேனுகிய கண்ணீர் ஒழுகக் கலந்து தழுவி, வெண்சோற்றை உண்ணுக என்று ஏந்திக் குளிர்ந்த உடுக் கணங்களுடன் அந்த உடுபதிக் கடவுளாகிய சந்திரனைத் தனது மடலின் மேலே வைத்துத் தாங்குவதை ஒத்திருக்கின்ற நெய்தல் நிலத்தைத் தழுவிய மருத நிலவேலியையுடைய கடவுட் பொலிவு மிகுந்த பெரும் பற்றப் புலியூரில் எழுந்தருளியுள்ள வைதிகக் கூத்தனே! பொன்னிறமாகிய புறவும் கருநிறமாகிய காக்கையும் நிலைபெற்ற பெரிய இமய மலைச் சாரலை அடைந்தால், இருநிறங்களையுடைய அப்பறவைகளுக்கு ஒரு நிறமல்லாது வேறு வேறு நிறங்கள் தோன்றுவதுண்டோ ? இறைவனே! உனது இனிய அருள் முதிர்ந்த சந்நிதியை அடைந்ததனால் தவப்பெருந் தொண்டர்களும் யானுமாகிய இருவேமும் பெற்றது ஒரே பேறு ஆகலின், அவற்றில் வேற்றுமை உள்ளதோ ? ஆற்றல் மிகுந்த சிறப்புடைய அவர்களுடன் எனக்கு வேற்றுமை இல்லை.

ஓட்டுவிக்கக் கூட்டினைவிட் டோடும் பொறியரவைத்
தாட்டுவிக்கும் சித்தர்நீ ரானக்காற் – கூட்டமிட்டு
மன்ருடும் உம்மையொரு மாசுணநின் ருட்டுவிக்க
நின்ருடு கின்றதென்கொல் நீர். 6

மனத்தைப் பலவழிகளிலும் ஓடச்செய்யத் தேகத்தை விட்டு ஓடுகின்ற இந்திரியங்களாகிய பாம்புகள் ஐந்தையும் ஆட்டுகின்ற சித்தர் நீரானல், கூட்டம் இட்டு மன்றிலே ஆடுகின்ற உம்மை ஒரு பதஞ்சலியாகிய பாம்பு நின்று ஆட்டுவிக்க, நீர் நின்று ஆடுகின்றது என்ன வியப்பு ?

நீருண்ட புண்டரி கத்துணைத் தாணிழற் கீழ்ப்பொலியும்
சீருண் டடித்தொண்டு செய்யா எனக்குஞ்சிற் றம்பலத்தெம்
காருண்ட கண்டனைக் கண்டன ளுலக் கடலமுதம்
ஆருண் டனர்மற் றவரெவ ரேனு மமரர்களே. 7

நீரிலே யுள்ள தாமரைமலர் போன்ற இரண்டு திருவடிகளின் கீழே பொலிந்திருக்கும் சிறப்பு, அடித்தொண்டு செய்யாத எனக்கும் உண்டு. திருச்சிற்றம்பலத்தில் எழுந்தருளியுள்ள எமது நீலகண்டனைத் தெரிசித்தேன். அந்தத் திருப்பாற் கடலில் உண்டாகிய அமுதத்தை உண்டவர் யார் ? அவர் எவராயிருந்தாலும் அமரர் ஆவாரல்லவா ?

(தொடரும்)

CHAPTER I

Sri Ganapati is the Lord of Siva Ganas. He is also Vigna-Nayaka, and the favourite son of Lord Siva and Sri Parvati. He is the embodiment of Wisdom and the Lord of obstacles.

Ganapathi or Ganesha is perhaps the most popular of the Gods of the Hindu Pantheon. He is worshipped all over India as the Lord of Obstacles; In South India in particular we find images of Lord Ganesha in every village. Small shrines for this deity exist every where. This deity is known by several such names such as GAJANANA, EKADANTHA, HERAMBA, MAHODARA, PURANA PURUSHA etc. The word Ganapathi has special significance. 'Ga' is said to stand for wisdom, 'Na' for Mukthi and 'Pathi' for the Parabrahma. He is thus the One who is capable of giving wisdom and Mukthi.

According to those proficient in the History of Evolution of the images of Gods of the Hindu Pantheon, Ganapathi is a deity who has been worshipped even in the primitive ages in India. The pot belly, the elephant head and trunk of the images of Lord Ganesha would support the view that the God is not only One who has been worshipped since ages but perhaps is one who combines in himself traits of Yakshas and Nagas-deities worshipped long long ago. Puranas however give several accounts of the manifestation of this God which are too well known to be repeated in this booklet. It is however interesting to note that Ganesha is mentioned in AITAREYA

The above article is reproduced with the kind permission of the Trustee of 'Sri Kalahasthi Temple',

BRAHMANA where he is identified with Brahma, Brahmanaspati or Bruhaspathi*. Ganesha is also held to be an incarnation of Lord Krishna. It is also worth mentioning that there was a sect called the Ganapatya sect given to the worship of Lord Ganesha, in the early Centuries of the Christian era.

There are several types of Ganesha images. These include the Bala Ganapathi, the Taruna Ganapathi, the Vira Vigneswara, the Bhakti Vignesvara, the Sakthi Ganesha family comprising of Lakshmi Ganapathi, Ucchista Ganapathi, Maha Ganapathi, Urdhva Ganapathi, and Pingala Ganapathi, Heramba Ganapathi, Prasanna Ganapathi, Dhvaja Ganapathi, Unnatha Ganapathi, Vignaraja Ganapathi, Bhuvanesa Ganapathi, Nritya Ganapathi, Haridra Ganapathi, Bhalachandra Ganapathi, Surpakarna Ganapathi, and Ekadantha Ganapathi. The Mudgala Purana actually, recognises the thirty-one forms of Ganapathi. The usual type of Ganesha image however has the following characteristics. The image is usually a seated figure with the pot belly prominently jutting out between the images two legs; the right foot is held erect, while the left leg is bent; the left foot is exhibited touching the pot belly. The image exhibits an elephant head with two tusks; the right tusk is usually shown as broken at the top while the left tusk is fully formed. The trunk is usually shown as touching the Modaka or a wood apple held in the lower left hand. The Lord has three other arms, the upper right hand usually exhibits the Hook or Ankusa while the upper left holds the noose or Pasa. The lower right hand always exhibits the Broken Tusk. Other characteris-

* From Vastu Sastra—Hindu canons of Iconography and Painting by Dr. D. N. Shukla, Gorakpur, 1958.

tics include an extra eye, the big belly tied up with a snake and a Yagnopavita. His favourite Vahana is the mouse shown in miniature in the image.

The Nataraja Rangastala at Kalahasti has a rare rock carving of a unique type of Ganesa—namely the Nritya Ganesa. In this bas-relief, the dancing Lord is depicted with six arms, two eyes, an elephant's head and trunk and elephant's ears; his four upper arms hold the following weapons: the goad or Ankus, the axe, a unique discus and the noose. The lower right hand holds the broken elephant's tusk while the elephant trunk is depicted as eating a sweet held on the lower left palm. The pot belly of the Lord is girded around by a serpent This is a unique rock carving which should not be missed by devotees visiting Sri Kalahasti. It is also worth mentioning that a life size sculpture of such a Nritya Ganesa is to be found in the Sri Veda Narayanaswamy temple of Nagalapuram in Chittoor District.

There are two other unique murthis of Sakthi Ganesa (also called Maha Ganapathi) apart from the normal form in the temple corridor opposite the Sahasra Lingam shrine in the inner temple complex. These images are described in detail in Chapter-VI. These images should also not be missed by the devotees and tourists alike visiting Sri Kalahasti.

உ

சிவ சிவ

பன்னிரு திருமுறைப் பதிப்பு நிதி வெளியீடு

மூவர்தேவாரம் :: தலமுறை

[அடங்கன் முறை]

(ஒன்று முதல் ஏழு திருமுறைகள்)

மார்கழித் திருவாதிரை வெளியீடு; 14—1—1968உ

பெரிய எழுத்தில்–வெள்ளைத் தாளில்–1600 பக்கங்கள்

டெமி சைசு–காலிக்கோ கட்டடம் – விலை ரூ. 8—75

தனிப்பிரதி அனுப்பப் பதிவு அஞ்சல்
தபால் கட்டணம் ரூ. 2—15

மூன்று பிரதிகளுக்குக் குறையாமல் வாங்கும் வெளியூர் அன்பர்களுக்குத் தனிச் சலுகை பின்வருமாறு:-

தமிழக அரசு எல்லைக்குளிருக்கும் எந்த ரயில்வே நிலயத்துக்கும் ரயில்வே கட்டணம் இல்லாமல் அனுப்பப்பெறும். அன்னோர் வாங்கும் புத்தகங்களுக்கு உரிய முழுவிலைத்தொகை M. O. அனுப்புவதோடு, ரயில்வே நிலையத்தின் பெயரும், தங்கள் முகவரியும் தெளிவாக எழுதியனுப்ப வேண்டும். V. P. P. யில் அனுப்பப்பெற மாட்டாது.

வியாபாரிகள் 20 புத்தகங்கள் வாங்கினல் 20% கழிவு உண்டு. பாக்கிங்–தபால் கட்டணம் தனி.

கிடைக்குமிடங்கள்:

1. திரு. T. M. குமரகுருபரன் பிள்ளை, B. A., B. L.,
   நிரந்தரத் தலைவர், 'குமரகுருபரன் சங்கம்'
   ஸ்ரீவைகுண்டம், திருநெல்வேலி ஜில்லா.

2. தியாகராச விலாஸம்,
   53, *பிள்ளையார் கோயில்தெரு,*
   திருவேட்டீஸ்வரன் பேட்டை, சென்னை–5.

ஆறுமுகம் துணை செய்யும்

திரு. ஜெ. மகாதேவன் அவர்கள்,
8, சிங்காரத்தோட்டம் 6வது சந்து,
பழைய வண்ணாரப்பேட்டை, சென்னை—21.

ஆதியும் அந்தமும் இல்லாத அருட்பெருஞ்ஜோதியான ஆண்டவன், உலகஉயிர்கள் உய்யவேண்டி சோதிப்பிழம்பான ஓர் மேனியும், கருணை பொழியும் ஆறு திருமுகங்களும், பனிரெண்டு திருக்கரங்களும் கொண்டு முருகன் என்னும் திருப்பெயருடன் சரவணப்பொய்கையில் அவதரித்தான்.

அருவமும் உருவும் ஆகி அநாதியாய்ப் பலவாய் ஒன்றாய்
பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பதோர் மேனி யாகக்
கருணைகூர் முகங்கள் ஆறும் கரங்கள் பன்னிரண்டுங் கொண்டே
ஒருதிரு முருகன் வந்தாங்கு உதித்தனன் உலகம் உய்ய.

என்பது கந்தபுராணம்.

கிழக்கு, தெற்கு, மேற்கு, வடக்கு, கீழ், மேல் ஆகிய ஆறுபக்கங்களிலும் தன் ஆறுமுகங்களை வைத்து இருக்கின்ருன். அம்முகங்கள் ஆறும் ஆறுவித சக்திகள் என்பர்; அவை ஆறுவிதத் தொழிலை ஓவாது நடத்துகின்றன. சைவம், வைணவம், சாக்தம், காணபத்தியம், கௌமாரம், சௌரம் என்ற ஆறு சமயங்களுக்கும் பொருளாகத் திகழ்கின்ருன். அவனன்றி ஓர் அணுவும் அசையாது என்றபடி அவனுக்குத் தெரியாமல் ஒரு காரியமும் நம்மால் செய்ய முடியாது. இதனைக் கருதியேதான் குமரகுருபரரும் வஞ்சித்தொழுகும் மனிதர்களை நோக்கி,

"வஞ்சித் தொழுகும் மதியிலிகாள் யாவரையும்
வஞ்சித் தேம்என்று மகிழன்மின் — வஞ்சித்த
எங்கும் உளன்ஒருவன் காணுங்கொல் என்றஞ்சி
அங்கம் குலைவது அறிவு." —நீதிநெறிவிளக்கம்.

என்று அறிவுறுத்துகின்ருர்.

கருணையே வடிவமான ஆறுமுகன் 'குமராய நம' என்ற ஆறெழுத்து மந்திரத்தில் நிலைபெற்றிருக்கிறான். அத்திருமந்திரத்தை ஒருகால் கூறினாலே பல நலன்களைப் பெறலாம்.

''குமரா நமஎன்று கூறினர் ஓர்கால்
அமரா வதியாள்வ ரன்றி — யமராசன்
கைபுகுதார் போரூரன் கால்புகுவார் தாயுதரப்
பைபுகுதார் சேரார் பயம்''

என்பார் திருப்போரூர் சிதம்பரசுவாமிகள். சிவபெருமானும் 'குமரா நம' என ஓதிதான் முருகப்பெருமானிடம் உபதேசம் பெற்றுக் கொண்டாராம். இதனை,

''நாதா குமரா நமஎன் றரனார்
ஓதாய் என ஓதியதெப் பொருள்தான்
வேதா முதல் விண்ணவர் சூடுமலர்ப்
பாதா குறமின் பதசே கரனே.''

—கந்தர்அநுபூதி.

என்று அருணகிரிநாதர் நெஞ்சக்கனகல் உருகப் பாடுகின்றார்.

ஆனைமுகற்கிளைய ஆறுமுகப்பெருமாளானவன் வெற்றி வேல் பெருமாளாகவும், தொழுது வழிபடும் அடியார்களுக்கு நல்ல பெருமாளாகவும், அவுணர் குலம் அடங்க பொடியாக்கிய பெருமாளாகவும் விளங்குகின்றான். அவன் திருநாமத்தைக் கூறுகின்றவர்கள் பிறவிப் பெருங்கடலை கடப்பர்; கொடிய வறுமைப்பிணியிற் சிக்குண்டு உழலாமல் நலம் பெறுவர்.

முடியாப் பிறவிக் கடலிற் புகார்முழு துங்கெடுக்கு
மிடியாற் படியில் விதனப் படார்வெற்றி வேற்பெருமாள்
அடியாற்கு நல்ல பெருமாள் அவுணர் குலமடங்கப்
பொடியாக் கியபெரு மாள்திரு நாமம் புகல்பவரே.

என்பது கந்தர் அலங்காரம்.

புரிபிழை பொறுக்கும் சாமியாய் முருகவேள் இருப்பதால் அவனை கருணைப்பெருங்கடல் என அன்பர் போற்றி துதி செய்வர்.

''ஆறுமுகப் பெருங்கருணைக் கடலே தெய்வ
யானைமகிழ் மணிக்குன்றே யரசே முக்கட்
பேறுமுகப் பெருஞ்சுடர்க்குட் சுடரே செவ்வேல்
பிடித்தருளும் பெருந்தகையே பிரம ஞானம்

வீறுமுகப் பெருங்குணத்தோர் இதயத் தோங்கும்
விளக்கமே ஆனந்த வெள்ளமே முன்
தேறுமுகப் பெரிய அருட்குருவா யென்னைச்
சிறுகாலை யாட்கொண்ட தேவ தேவே.''

—திருஅருட்பா.

என்று ஆனந்தக் கண்ணீர் வழியப் பாடுகின்றார் திருவருட் பிரகாசவள்ளலார் எனும் இராமலிங்க சுவாமிகள்.

நம் வாழ்க்கை பலவித இடையூறுகள் நிறைந்தது. அவற்றிற்காக நாம் அஞ்சி அஞ்சி வாழ்கின்றோம். அச்சங்களைப் போக்கும் வேலையும், மயிலையும் உடைய முருகப்பெருமானை வணங்கினால் அச்சமில்லை அச்சமில்லை அச்சம் என்பதில்லையே என்று வீரமுடன் நாமும் பாடலாம். அஞ்சுதலை ஒழித்து ஆறுதலை வழங்கவே தயாபரனான கந்தவேள் ஆறுமுகங்களைக் கொண்டு துலங்குகின்றான். அவனுடைய சரணகமலாலயத்தை அரைநிமிட நேரமாகிலும் சிந்தித்து வந்திக்க வேண்டும்.

''அஞ்சுமுகம் காட்டாமல் ஆறுமுகம் காட்டவந்த
செஞ்சரணச் சேவடியைச் சிந்தைவைப்பது எந்நாளோ.''

என்று ஏங்குகிறார் தாயுமானவர். முருகப்பெருமானைத் தொழும் நாளே திருநாள்; தொழாமற் செலுத்திய நாள் கருநாள் என மறை புகலும்.

அலைகடல் துரும்பென வாழ்க்கையில் உழலும் நமக்கு ஆறுமுகம் துணைசெய்யுமே அன்றி வேறு எம்முகமும் துணை செய்யாது. நிலையற்ற துணையான பல்வேறு முகங்களை நம்பாமல் அருள்தரும் ஆறுமுகனையே துணைகொள்ள வேண்டும். கந்தப்ப தேசிகர் என்னும் பெரியார் தணிகை முருகனிடம், ஆறுமுகங்களில் ஒன்று தமக்கு உறவாகவும், பன்னிரண்டு கண்களில் ஒன்று தம் ஆணவம் கெட நோக்கவும், வீரம் பொருந்திய பன்னிரு கைகளில் ஒன்று தம் பாவக்கடலைத் தடுக்கவும், ஆறு செவ் வாய்களில் ஒன்று நல்லவீடு சேர் மொழி அருளவும், பன்னிரு செவிகளில் ஒன்று தம் செந்தமிழ் மாலையை சூடிக் கொள்ளவும் வேண்டும் என்று விண்ணப்பிக்கிறார். அவர்தம் அருந்தமிழ் பாடல்;

"அறுமு கந்தனில் ஒருமுகந்தனை அடியனேற்குற வாக்கிடீர்
  அம்பகம்பனி ரண்டி லொன்றிலென் ஆணவங்கெட நோக்கிடீர்
வெறிகொள் பன்னிரு கையிலொன்றிலென் வெம்பவக்கடல் தடுத்திடீர்
  விளங்கும் ஆறுசெவ் வாயி லொன்றினில் வீடுசேர்மொழி கொடுத்திடீர்
செறியும் ஆறிரு செவியில் ஒன்றில்என் செய்தி யாவையும் கேட்டிடீர்
  செய்ய மார்பம் ஓராறி லொன்றிலென் செந்தமிழ்த் தொடை பூட்டிடீர்
தறுகண் வேடர்கள் உதவுமின் கொடி தனமும் அன்பர்கள் மனமுநீள்
  தணிகையங்கிரி முடியு நண்பு தழைத்த செங்கல்வ ராயரே."

—*தணிகைக் கலம்பகம்.*

கலியுகத்தில் கண்கண்ட தெய்வமாய் விளங்கும் கந்த வேள் ஆறுமுகங்களைக் கொண்டு நமக்குத் துணை செய்யும் என்ற உறுதியான நம்பிக்கையுடன் வணங்க வேண்டும். ஆறுமுக அண்ணல் தூயநறுமணமிக்க மலர்களைக் கொண்டு துதிக்கும் அன்பர்களுக்கு பதினாறு வகையான பேறுகளை வழங்கி அருள்புரிவான் என்பது திண்ணம்.

ஆறு முகவனை, நாறு மலர்கொடு
கூறும் அடியவர், பேறு பெறுவரே. —*குமரகுருபரர்.*

வாழ்க உலகெலாம்.

காலக் கணிதம்

திரு. A. இராசமாணிக்கம் அவர்கள்,
உதவி ஆசிரியர்,
ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் உயர்தொடக்கப்பள்ளி,
திருப்பனந்தாள்.

முன்னுரை :

ஆகாயமண்டலம் 27 நக்ஷத்திர பாகங்களைக் கொண்டதாய் அதாவது 360 பாகையையடைவாயுள்ளதென வகுத்துள்ளார்கள். நம்பூமியும் மற்றைய கோள்களும் சூரியனிலிருந்து ஒன்றற்கொன்று தூரத்தில் அந்நக்ஷத்திர மண்டல பாகங்களில் சுற்றிவரும் காலத்தை அளவிடுவதாய் வாரம், திதி, நக்ஷத்திரம், யோகம், கரணம் ஆகியவற்றின் காலவரையறையை மிகத்துல்லியமாகக் குறிப்பிடும் கணித சாஸ்திரம் பஞ்சாங்கம் ஆகும். பஞ்சாங்கம் மக்களுக்குக் கண் போன்றது. இது காலத்தை அனுசரிக்கும் பழக்கத்தை உண்டாக்குகிறது. இவ்வித திருக்கணித பஞ்சாங்கத்தின் முக்கிய விஷயங்களைத் தக்க உதாரணத்துடன் காண்போமாக.

காலக்கணக்கு :

காலத்தைக் கணக்கிட யாதொரு வரம்புமில்லை. யாராயினுமொரு சிறப்புற்ற அரசர் ஆட்சிக்காலந் தொடங்கியோ அல்லது ஏதேனுமொரு சம்பவம் நடந்தகாலம் தொடங்கியோ அல்லது மதகுருமார்கள் தோன்றிய காலந்தொடங்கியோ காலத்தைக் கணக்கிடுகிறார்கள். சாலிவாகனன் என்ற ஓர் அரசர் நரசிங்க நகரத்தை ஆண்டார். அவருடைய 349ஆம் ஆட்சி ஆண்டில்தான் வானசாஸ்திரம் ஒழுங்குப்படுத்தப் பட்டுப் பஞ்சாங்க கணிதமாகத் தொகுக்கப்பட்டது. அக்காலமுதல் பிரபவாதி அக்ஷய முடிய 60 வருஷங்கள் ஒரு பரிவிரித்தி அல்லது ஒரு வட்டமாகத் தற்போது 25 பரிவிரித்

திகள் முடிந்து 26ஆம் பரிவிரித்தியில் 42வதாகிய கீலக வருஷம் பிறக்கிறது. அதாவது 25 × 60 = 1500. இத்துடன் 349-ஐச் சேர்க்க 1849 இத்துடன் பிரபவாதி 41ஐச் சேர்க்க 1849 + 41 = 1890 இதுவே இந்த கீலக ஆண்டின் கத சாலி வாகன சகாப்த ஆண்டாகும்.

இதன்முன் கலியுகத்தில் சென்றது வருஷம் 3179 இதை சாலிவாகன சகாப்த ஆண்டில் சேர்க்க 3179 + 1890 = 5067 இதுவே இந்த கீலக ஆண்டின் கத கலியுகமாம்.

யுகங்கள் :

யுகங்கள் கிரேதாயுகம், திரேதாயுகம். துவாபரயுகம் கலி யுகம் என நான்காகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. இவை முறையே 4, 3, 2, 1 என்ற மடங்கில் உள்ளது. அதாவது கிரேதாயுகம் வருஷம் 17,28,000. திரேதாயுகம் வருஷம் 12,96.000. துவாபரயுகம் வருஷம் 8,64,000. கலியுகம் வருஷம் 4,32,000. இவைநான்கும் சேர்ந்தது வருஷம் 43,32,000. இது ஒரு சதுர்யுகமாம்.

வருஷம் :

வருஷத்தின் கணக்கில் சந்திர, சௌர, சரவன, நக்ஷத் திர, பார்கஸ்பத்திய மானம் என ஐந்து மானங்களாகக் கணக் கிடப்படுகிறது.

(1) சாந்திர மானமாவது பங்குனி மாத சுக்லபட்ச பிர தமை முதல் மறுவருஷ பங்குனிமாத கிருஷ்ணபக்ஷ அமா வாசை முடியச் சந்திரன் ஒருதடவை சுற்றிவரும் காலமாகும். இவ்விதம் சுற்றிவருவதற்கு 354 நாட்களாகிறது.

(2) சௌரமான வருஷமாவது சூரியன் மேடமாதம் தொடங்கி மீன மாதமுடிய ஒருதடவை சஞ்சரிக்கும் காலமா கும். இவ்விதம் வருவதற்கு 365 நாள், 15 நாழிகை, 31 விநாடி, 15 தற்பரை எனக்கணக்கிடப்படுகிறது.

(3) சூரிய உதயமுதல் மறுபடியும் சூரியன் உதயமா கும் காலம்வரை ஒருதினமாகும். இவ்விதம் 360 நாட்கள் கொண்டது ஒரு சரவனமான வருஷமாகும்.

(4) அசுவதியாதி ரேவதிமுடிய 27 நக்ஷத்திரங்களும் ஒருதடவை சுற்றிவரும்காலம் ஒருமாதமாக 12 தடவை சுற்

றிவரும் காலத்தை ஒருநக்ஷத்திரமான வருஷமாகக் கொள் கின்றனர். இது 324 நாட்களையுடையதாகும்.

(5) குருபகவான் 30 பாகையை உடைய ஒரு ராசியில் சஞ்சரிக்கும் காலம்361 நாட்கள். இதைப்பார்கஸ்பத்தியமான வருஷமென்பர். இந்தப்பார்கஸ்பத்தியமான வருஷம் வட நாட்டில் வழக்கத்திலிருந்து வருகிறது. தென்னுட்டில் சாந் திரமான சௌரமானங்களை முக்கியமாகக் கொள்கின்றனர்.

மாதம் :

சௌரமான வருஷத்தில் சூரியன் ஒவ்வொரு இராசியிலும் சஞ்சரிக்கும் காலம் (இது 28 நாட்களுக்குக் குறையாமலும் 32 நாட்களுக்கு மேற்படாமலும் இருக்கும்) அந்தந்த இராசி யின் பெயரால் மாதங்களின் பெயரைக்கூறுகின்றனர். அவை மேஷம், ரிஷபம், மிதுனம். கடகம், சிம்மம், கன்னி! துலாம், விருச்சிகம், தனுசு. மகரம், கும்பம், மீனம் என்பனவாம்.

சாந்திரமாத வருஷத்தின் மாதங்களை ஒவ்வொரு சௌர மான மாதத்திலும் பூரணச்சந்திரன் இருக்கும் நக்ஷத்திரத்தின் பெயரால் கூறுகின்றனர். அவை சைத்திரம், வைகாசம், ஜ்யேஷ்டம், ஆஷாடம், சிராவணம், பாத்திரபதம், ஆஸ் விஜம், கார்த்திகம், மார்க்கசிரம், புஷ்யம், மாகம், பால்குணம் என்பனவாம்.

இராஜா, மந்திரி :

சாந்திரமான வருஷாதிபரை இராஜா என்றும் சௌர மான வருஷாதிபரை மந்திரி என்றும் கூறுவர். பங்குனிமாத சுக்லபட்சபிரதமை எந்தவாரத்தில் வந்ததோ அந்தவாரத் துக்கு அதிபராகிய கிரகமே இராஜா. உதாரணமாக, பிலவங்க வருஷ பங்குனிமாத சுக்லபட்ச பிரதமை சுக்கிரவாரத்தில் வருகிறது. அந்த சுக்கிரவாரத்தின் அதிபர் சுக்கிரன் என்ற கிரகமாகும். ஆகையால் சுக்கிரன் கீலக ஆண்டின் இராஜா வாகும்.

சௌரமான வருஷப்பிறப்பு எந்த வாரத்தில் வரு கிறதோ அந்தவாரத்தின் அதிபராகிய கிரகமே மந்திரியாகும். சௌரமான வருஷப் பிறப்பைக்காண கலியுக சுத்ததினம்

காணுதல் வேண்டும். இந்தகலியுக சகாப்தம் 5069 கீலக ஆண்டிற்கு கலி சுத்ததினம் 1851494 நாள், 6 நாளிகை, 15 விஞடி. இதை 7 ஆல் வகுக்க ஈவு 264449 போக மீதி 1 நாள், 6 நாழிகை, 15 விஞடி. இந்த மீதியை சுக்கிராதியாய் எண்ண 2 வது தினமாகிய சனிவாரமாகிறது. சனி வாரத்தில் 6 நாழிகை 15 விஞடி யளவில் கீலக ஆண்டு பிறக்கிறது. ஆகையால் இந்த சனி என்றகிரகம் கீலக வருஷத்தின் மந்திரி யாகிறது.

நவநாயகர்கள் :

நவநாயகர்களில் இராஜாவையும் மந்திரியையும் அறியும் விதம் கூறப்பட்டது. மற்றும் எழின்மர்களானவர்கள் சேஞதிபதி, சஙயாதிபதி, ரஸாதிபதி, நீரஸாதிபதி, தானி யாதிபதி, அர்க்காதிபதி, மேகாதிபதியாவார். ஆவணிமாதப் பிறப்பின் வாராதிபதியை சேஞதிபதியென்றும், ஆடிமாதப் பிறப்பின் வாராதிபதியை உணவுப் பயிர்களுக்குரிய ஸஸ்யாதி பதியென்றும். ஐப்பசிமாதப் பிறப்பின் வாராதிபதியை ரஸ வர்க்கமாகிய எண்ணெய், நெய், பழம், சர்க்கரை போன்ற வற்றிற்கு அதிபதியென்றும், தைமாதப் பிறப்பின் வாராதி பதியை ரத்தினம், மணி, பாஷாணவர்க்கம் முதலியவற்றிற்கு அதிபதியென்றும், மார்சழிமாதப் பிறப்பின் வாராதிபதியை நெல் முதலிய தானியங்களுக்கு அதிபதியென்றும், ஆனிமாதப் பிறப்பின் வாராதிபதியைச் செலவழிக்கப்படுகிற அர்க்காதிபதி யென்றும் கூறுவர். ஆனிமாதத்தில் சூரியபகவான் திருவா திரை நக்ஷத்திரத்தில் பிரவேசிக்கிர தினத்தின் வாராதிபர் மேசாதிபதியாம். (கிரகபாதசாரத்தில் திருவாதிரை நக்ஷத் திரத்தில் சூரியன் வருகிற தேதியைக் காண்க.)

இந்த நவநாயகர்கள் என்ற கிரகங்களின் தன்மையால் நவநாயகர்களின் பலன்கள் ஆண்டுதோறும் பஞ்சாங்கத்தில் எழுதப்படுகிறது. இப்புத்தாண்டின் நவநாயகர்கள் பலனேயும் மற்றும் மகர சங்கிராந்தி பலன் கந்தாய பலன் முதலியவை களேயும் பகவான் சந்நதியில் ஜோதிஷர் அல்லது குருக்கள் மார் திருவாக்கால் படிக்க அதை நாம் கேட்பது நலந்தரும்.

(தொடரும்)

HYMNS OF THE TAMIL SAIVITE SAINTS

BY

F. KINGSBURY, B. A. (Madras)

AND

G. E. PHILLIPS, B. A. (Lond.), M. A. (Oxon.)

(மலர் 19. இதழ் 3-ன் தொடர்ச்சி)

IV

MANIKKA VASAHAR

(Sanskrit form MANIKYA VACHAKA)

90 இழித்தனெ னென்னை யானே யெம்பிரான் போற்றி
போற்றி
பழித்திலே னுன்னை யென்னை யாளுடைப்பாதம்
போற்றி
பிழைத்தவை பொறுக்கை யெல்லாம் பெரியவர்
கடமை போற்றி
யொழித்திடிவ் வாழ்வு போற்றி யும்பர்நாட் டெம்
பிரானே.

90 None but myself has sunk myself. Thy name be
ever praised !
No blame lay I on Thee, lauds to my Master be
upraised !
Yet to forgive is aye a mark of greatness. Praise
to Thee !
Lord of the land celestial, Praise ! O end this life
for me.

(To be continued)

Reproduced with the kind permission of Oxford University Press, Calcutta.

(N. B. Copies available for sale at the above Press)

மணிமொழி விளக்கம்

சித்தாந்தக் கலைமணி, மகா வித்துவான்,
திரு. சி. அருணைவடிவேல் முதலியார் அவர்கள்,
தருமையாதீனப் பல்கலைக்கல்லூரி பேராசிரியர், தருமபுரம்.

திருவம்மானை
7 – ம் திருப்பாட்டு
"ஓயாதே உள்குவார்"

ஆறுமவள் எறிந்த அம்மனைக் காயை மற்றொருத்தி பிடித்துக்கொண்டு பாடுகின்றாள்:—

ஓயாதே உள்குவார் உள்ளிருக்கும் உள்ளானைச்
சேயானைச் சேவகனைத் தென்னன் பெருந்துறையின்
மேயானை வேதியனை மாதிருக்கும் பாதியனை
நாயான நந்தம்மை ஆட்கொண்ட நாயகனைத்
தாயான தத்துவனைத் தானே உலகேழும்
ஆயானை ஆள்வானைப் பாடுதுங்காண் அம்மானாய்.

இப்பாட்டில் இவள் பெருந்துறைப் பெருமானதுபெருஞ் சிறப்புக்கள் சிலவற்றை எடுத்தியம்பினாள். முதலாவதாக, 'பெருந்துறைப் பெருமான், ஏனைய தலைவர்கள் போன்றவன் அல்லன்; அவரெல்லாம் தம்மைக் காதலிப்பாரின் வேறாய்ப் புறத்தே நிற்பர். அதனால், அவரொடு கொள்ளும் உறவினால், கூடிப்பெறும் இன்பத்திலும், பிரிந்தெய்தும் துன்பமே பெரிதாம். அத்துன்பக் காலத்து அவரை நினைந்தவழி அந்நினைவாற்பெறுவது வருத்தம் மீதூர்தலேயன்றி, அவர் விரைந்து வந்து கூடுமாறில்லை. பெருந்துறைப் பெருமான் அவ்வாறு தம்மைக் காதலிக்குமவரின் வேறாய்ப் புறத்து நில்லாது, அவ

தருமையாதீனப் பல்கலைக்கல்லூரி பேராசிரியர், சித்தாந்தக் கலைமணி, மகா வித்துவான், திரு. அருணைவடிவேல் முதலியார் அவர்கள், நம் வேண்டுகோளுக்கிணங்கி திருவாசக உரை 'குமரகுருபரனுக்கு'த் தொடர்ந்து உதவ இணங்கியுள்ளார்கள்.

ரோடு ஒன்றாய், அவர்தம் அகத்தே நிற்பன். அதனால், அவனோடு உறவுகொண்டவழிக் கூட்டமன்றிப் பிரிவில்லை. புறத்து நில்லாது அகத்தே நிற்பவனாதலின், அவனைக் கூடுதலும், புறத்தாலன்றி அகத்தாலேயாம்' என்பாள், **"உள்குவார் உள்ளிருக்கும் உள்ளானை"** எனக் கூறினாள். அங்ஙனம் கூறுகின்றவள், 'அகத்தாற் கூடுகின்ற அவனை அங்ஙனம் அகத்தானே ஒருகாற் புல்லியவழிப் புல்லினார்க்கு எங்கும் இலாததோர் இன்பம் விளைதலின், அவர் அவனைப் பின்னும் பின்னும் ஆர்வத்தோடே புல்லுவர். அவர் அவ்வாறு புல்லுந்தோறும் அவன் அவர்தம் உள்ளத்தின் உள்ளீடாய் நின்று தனது இன்பத்தினை ஒருகாலைக் கொருகால் மிகப் பொழிதலின், புல்லுவோர் ஆரா இன்பத்தராகி அவனை எய்ப்பின்றி எஞ்ஞான்றும் நீங்காது புல்லியே கிடப்பர்' என்றற்கு, **"ஓயாதே உள்குவார் உள்ளிருக்கும் உள்ளானை"** என்றாள். ஓய்தல்-மெலிதல். உள்குதல் – நினைத்தல்.

ஓயாது உள்குவார்க்கு அவர் உள்ளத்துள்ளே நின்று ஆரா இன்பத்தை அளித்தருளுகின்ற அவன், உள்காதார்க்கு எத்துணையும் சேயனாய் அப்பாற்பட்டு நிற்றலையும், ஒருவனே இங்ஙனம் உள்குவார்க்கு மிக அணியனாய் அவர் உள்ளத்துள்ளே நிற்றலும், உள்காதார்க்கு எத்துணை முயன்று தேடினும் காணலாகாது, மிகச் சேயனாய் நிற்றலும் ஆகிய திறத்தினை உடையனாதலையும் நினைந்து, **"சேயானைச் சேவகனை"** எனக்கூறி வியந்தாள். சேயான் - சேய்மைக்கண் (தொலைவில்) உள்ளவன். சேவகன் - வீரன்.

இங்ஙனம் இவ்விருதிறத்தினையும் கூறி வியந்த இவள், 'புறத்துக் காணலாகாதவனாகிய அவன், நமக்கு இப்பெருந்துறையிற்றானே வேதியக் கோலத்தோடு வந்து காட்சிதந்து அளவளாவியது என்னோ!' என நினைந்து, **"தென்னன் பெருந்துறையின் மேயானை வேதியனை"** எனவும், யான் தனக்கு வழிபாடு செய்யச் சிறிதும் தகுதியில்லாத இழிதகையேனாதலை அறிந்தும் என்னைத் தனக்கு வழிபாடு செய்பவளாக ஏற்றுத் தான் எனக்கு நாயகனாயினான்; ஆரொருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர் என நினைந்து **"நாயான நந்தம்மை ஆட்கொண்ட நாயகனை"** எனவும் அவனது பெருங்கருணையை வியந்து பரவசம் எய்தினாள்.

'தென்னன் பெருந்துறையான் வேதியனுயின், உன் போலும் மகளிரோடு உறவுகொள்வானே' என்பார்க்கு, 'அவன் வேதியனுயினும் தனது திருமேனியின் ஒருபாதியில் மாதொருத்தியைக் கொண்டு விளங்குபவன்; அதனுல், அவன் என்போன்ருரிடத்து இரக்கமுடையனுதல் இயற்கையே' என்பாள், **"மாதிருக்கும் பாதியனே"** என்ருள். இதனுல், அவன் போகம், யோகம் இரண்டனேயும் தருபவனுதலின், அவனேடொப்பார் வேறு ஒருவரும் இல்லே என்பதும் குறித்தாள்.

'யாவர்க்கும் போகத்தையும், யோகத்தையும் தருவது அவனுக்குப் பெரிய புகழன்று ' ஏனெனில், எல்லாப் பொருளின் தோற்றத்திற்கும் அவனே காரணமாகலின் என்பதை, **"தாயான தத்துவனே"** என்பதனுற் குறித்தாள். தத்துவன்-மெய்ப்பொருளாயுள்ளவன். எல்லாப் பொருட்கும் காரணனுதலே வேருெருவகையாற் கூருது, **"தாயான தத்துவன்"** என்று கூறினுள், 'எப்பொருளேயும் தோற்றுவித்தலேயன்றித் தோற்றுவித்தபின் அவற்றை வளர்ப்பவனுமாகின்ருன்' என்பதும், 'அவையனேத்தையும் பிறிதொரு காரணத்தானன்றித் தனது பேரருளே காரணமாகச் செய்கின்ருன்' என்பதும் தோற்றுதற்கே. எனவே, தம் நலங்கருதாது ஒன்றனேச் செய்வோர் பிறர் இலராதலும், ஒரோவழி உளராயினும், அவர் சிலவற்றை அங்ஙனம் செய்தலன்றி எல்லாவற்றையும் அங்ஙனம் செய்யாமையும் கூறினுளாயினுள்.

'எப்பொருளேயும் தோற்றுவித்து, எல்லாப் போகத்தையும், யோகத்தையும் யாவர்க்கும் அவன் தருதல் அவரின் வேருய் நின்றன்றி எல்லாப் பொருளிலும் நின்றேயாதலின், இவ்வியல்பு பிறர்க்குக் கூடுமாறில்லே' என்பாள், **"தானே உலகேழும் ஆயானே"** எனவும், 'தன்பொருட்டு ஒன்றையும் வேண்டாதவனுகிய அவன் பிறரைப் பணிகொள்ளுதல், பணி செய்யுமவர் உய்தற் பொருட்டன்றிப் பிறிதில்லே' என்பாள், **"ஆள்வானே"** எனவும், 'அத்தகையோன் என்னேயும் வந்து பணிகொண்டான் எனின், யான் அவனது புகழையன்றி வேறு எதனேப் பாடுவேன்' என்பாள், **"பாடுதுங்காண் அம்மானய்"** என்றுங்கூறி அம்மனேக்காயை எறிந்தாள். இவற்ருல் இவள் பெருந்துறைப்பெருமான் தனக்குவமையில்லாத் தனிப் பெருந் தலேவனுதலே நினேந்து, அவனது அருட்குணங்களில் அழுந்திநின்றமை பெறப்படும்.

(தொடரும்)

மணிவாசகரின் மாண்புறு உவமைகள்

வித்துவான். திரு. பி. ரா. நடராசன் அவர்கள்.

கருவாசம் நீங்கத் திருவாசகம் பாடிய அருட்கவிஞர் மணிவாசகப் பெருமானாவார். சைவத்திருமுறைகள் பன்னிரண்டில் எட்டாம் திருமுறையாக இவரின் நூற்கள் நிற்கும். அனைவர்க்கும் எளிதில் கிட்டாத-எட்டாத-அன்பினை, அன்புடைமையைத் தெய்வப்புலவர் திருவள்ளுவனார் தம் நூலில் எட்டாம் அதிகாரமாக வைத்ததைப் போன்று அன்புநெறியாலன்றி உரை விளக்கத்தால் எட்டிப் பிடித்தற்கரிய மணிமொழிப்பெருமானின் திருவாசகத்தையும் எட்டாந்திருமுறையாக வைத்தனர். திருவாசகத்தின் சிறப்பைக் கூறவந்த சிவப்பிரகாச அடிகளார்'வாசகத்தைப் பொற்கலமென'க்கூறி நான்மறையினும் திருவாசகம் சிறப்புடையதாகக் கூறிப் பெருமைப்படுவர். 'திருவாசகத்திற்கு உருகார் வேறொருர் வாசகத்திற்கும் உருகார்' என்ற பழமொழியை அறியாதார் யார்? திருவாசகத்தை நன்கு கற்ற கல்வியிற்பெரிய கம்பரும் தன் இராமகாதையில் 'வாசகம் கற்றூர்முன் யாரே வாய் திறக்க வல்லார்' என்று கூறியதையுங் காண்க. இச்சிறப்புடன் இந்நூல் இலங்கி வருவதாலன்றோ கிறித்தவ சமயத்தை நந்தமிழ் நாட்டின்கண் பரப்பவந்த போப்துரைமகனார் திருவாசகத்தில் தம்மனத்தைப் பறிகொடுத்தாராய்த் தாம் வந்த குறிக்கோளையும் ஒரோவழி தள்ளி வைத்துத் தாம் பெற்ற இன்பம் தந் நாட்டாரும் எய்ய வேண்டுமென எண்ணி ஆங்கிலத்திலும் மொழிபெயர்த்தமையை நாம் அறிவோமல்லவோ! இந்நூலின் அருமைபெருமைகளை விரிப்பின் அவையே ஒரு தனிநூலாக அமையும்.

இவ்வருள்நூலில் மணிமொழிப் பெருமானார் 109 மாண்புறு உவமைகளைக் குறித்துள்ளார். அவ்வுவமைகளை விரித்துரைப்பதே இக்கட்டுரைத் தொடரின் நோக்கமாம் என்றுணர்க. இப்பணிக்கு அப்பெருமானின் திருவருள் முன்னின்று

கூட்டுவதாகவென்று வேண்டி அப்பெருமானின் மலரடிப் போதுகளைச் சென்னி வைத்துரைப்பேன்.

முதற்கண் உவமை என்பதன் விளக்கத்தைக் கூறுவேன். நூலாசிரியர், தாம் கூறப்போகும் கருத்தை நன்கு விளக்கு வதற்காக ஒன்றினைக்கூறி அதுபோல் இதுவெனக் கூறுவார். நூலாசிரியரால் சுட்டப்படுவது உவமையென்றும் அதைப் போன்றது எனத் தம் கருத்தைக் கூறுவது உவமேயம் என் றும் கூறுவர். இம்முறையில் உவமைக்கு நான்கு உறுப்புக் கள் உண்டு. அவை முறையே உவமானம், உவமேயம், உவ மவுருபு, உவமானத்திற்கும் உவமேயத்திற்குமுள்ள பொதுத் தன்மை எனப்படும். இதேபோன்று உவமையெழும் தோற் றத்திற்கு அடிப்படையாக வினை, பயன், வடிவம், நிறம் என்ற நான்கும் இன்றியமையாதனவாம். இந்நான்கினுள் ஒன்றி னையே அடிப்படையாகக் கொண்டு உவமைகள் எழுமெனி னும் சிலவற்றுள் ஒன்றினுக்கு மேற்பட்டு மூன்று வருதலும் உண்டு.

இதனை நாம் பின்வரும் தொல்காப்பியச் சூத்திரங்களால் அறியலாம்.

> **'வினைபயன் மெய்யுரு என்ற நான்கே**
> **வகைபெற வந்த உவமத் தோற்றம்'**
> **'விரவியும் வருஉம் மரபினுன.'**

இங்ஙனம் உவமையால் துய்க்கப்படும் பேரின்பத்தினைச் சான் றோராயினர் உவமைச்சுவை என்பர். சுவை என்ற சொல் லாட்சி ஒன்றே கொண்டு இது வாயால் நுகரப்படும் அறு சுவைகளுள் ஒன்றோ அற்றேல் செவியால் நுகரப்படும் ஒன் பான் சுவைகளில் ஒன்றோவெனின் அற்றன்று. பின் என்னை யெனின் கூறுவன். நம் ஐம்புலன்களுக்கும், அறிவிற்கும் நல் லின்பம் தருவனவற்றை யெல்லாம் 'சுவை' என்று பெரியோர் கூறும் மரபுபற்றியே ஈண்டு உவமையால் அடையும் இன்ப மும் சுவையெனக் கூறப்பட்டது. உவமை தமிழ்ப்புலவர் களுக்கு கைவந்த வொன்றாகும். எளிய உவமையிலேயே பெரும் பெரும் பொருள்களை விரித்துரைப்பர் சங்கச்சான் றோர்கள். தாம் கூறிய உவமைப்பெயராலேயே அச்சான்

ஞேர்களின் பெயரும் வழங்குவதாயிற்றெனின் அவ்வுவமை களின் சிறப்பினை என்போன்ருேரால் செப்பவும் முடியுமோ! புலவர்கள் தம்காலத்து வழங்கும் பழமொழிகளையும் உவமை களாக எடுத்தாள்வர் (அதனை இவ்வுவமை நிரலிற் காணலாம்) உவமை கூறுவதிலிருந்தே அப்புலவரின் மாப்புலமையை நாம் அறிந்து கொள்ளலாம். சுருங்கச் சொன்ஞல் புலவனின் அறி வினையும், பட்டறிவினையும் அளந்து காட்டும் கோலாகவும் உவமை பயன்படுகின்றது. இவ்வுவமை நிரலிற்காணப்படும் உவமைகளைப் படிப்பார் நன்கு அறிந்து பேரின்பப் பெரு வெள்ளத்தில் மூழ்கித் திளைக்க வேண்டு மென்பதற்காகவே இவ்விளக்கம் எழுதப்பட்டது. இனி உவமைகளைக் காண் போம்.

1. சிவபுராணம்.

உவமை 1.

கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போல (46)

உவமைக்கேற்ப பொருள்நிலை

கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்.

பொழிப்பு.

கறக்கப்பெற்ற பாலுடன், சருக்கரையும், நெய்யுங்கலந்த கலவையை உண்ணுங்கால் நாவிற்குத்தரும் இன்சுவைபோல அடியார்தம் சிந்தையிலே இனிமைபெற வீற்றிருந்து அவர்தம் பிறவியாகிய பிறப்பை நீக்கும் பெருமானே!

விளக்கம்.

இறைவனின் திருப்பெயர்களைக் கூறும்பொழுதும் அவ னமர்ந்து நிற்கும் நிலையினைக் கூறும்பொழுதும் நாஇனிக்கும் தன்மையை உலகியல் நெறிபட அடிகள் கூறுவது காண்க. சுவைகுன்ருத பால் என்பாராய் 'கறந்த பால்' என்றனர். பெருமானுர் கூறுவது போன்றே இராமலிங்க வள்ளலாரும் இறைவனின் திருப்பெயரை யோதுங்கால் ஏற்படும் இன்பப் பெருக்கினை,

'தனித்தனிமுக் கனிபிழிந்து வடித்தொன்றுக் கூட்டிச்
சர்க்கரையுங் கற்கண்டின் பொடியு மிகக்கலந்தே,
தனித்தநறுந் தேன்பெய்து பசும்பாலும் தேங்கின்,
தனிப்பாலுஞ் சேர்த்தொரு தீம்பருப் பிடியும்விரவி,
இனித்தநறு நெய்யளைந்தே யிளஞ்சூட்டி னிறக்கி
எடுத்தசுவைக் கட்டியினு மினித்திடுந் தெள்ளமுதே
அனித்தமறத் திருப்பொதுவில் விளங்குநடத் தரசே
அடிமலர்க்கென் சொல்லணியா மலங் கலணிந்தருளே!'
'வாயெலாந் தித்திக்கு மனமெலாந் தித்திக்கும்
மதியெலாந் தித்திக்கு மென்
மன்னிய மெய் யறிவெலாந் தித்திக்கு மென்னிலதில்
வருமின்ப மென்புகலுவேன்'

என்று நாவில் நீரூறக் கூறுவது காண்க. தேன்மருந்துப் பொருளாய் நிற்பதோடன்றி பிறமருந்துப் பொருள்கள் கெடாமல் இருப்பதற்கும் உதவுவதைச் சித்தமுறைவல்லார் கூறுவதற்கொப்ப ஆண்டவனின் தனித்தன்மையையும், தன்னை விரும்பி வேண்டுவாரிடத்து அவர்தம் சிந்தனையுள் வீற்றிருந்து அவர்தம் பிணியனைய மலங்களை அழித்துப் பேரின்பம் தந்தருளுவான் இறைவன் என்பதனைத் 'தேன்' என்ற சொல்லால் அடிகளார் குறித்தனர். இதனால்தான்

'தொல்லை இரும்பிறவி சூழுந் தளைநீக்கி
அல்லல் அறுத்து ஆனந்தம் ஆக்கியதே—எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவா சகம் என்னும் தேன்'

என்னும் வெண்பாவும் எழுந்தது. இதனால்தான் 'கருவாசம் நீக்கும் திருவாசகம்' என முதற்கண் குறித்தேன். பிறவியை நீக்க நாம் இறைவனின் அடிகளைச் சார்ந்திருக்க வேண்டுமென்பதனைத் தெய்வப்புலவர் திருவள்ளுவரும் 'பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார், இறைவன் அடிசேரா தார்' (10) என்றனர்.

(தொடரும்)

என்னை இழந்த நிலை

திரு. ஸ்ரீராமகதாரத்னம். V. தியாகராஜன் அவர்கள்,
புதுக்கோட்டை-1 (Trichy Dt.)

வேலு மயிலும் துணை என்று பாடும் வரங்கேட்ட அருணகிரியாருக்கு முருகவேள் தனது ஆறு முகங்களுடனும், பன்னிரு திருக்கரங்களுடனும் வள்ளி, தெய்வயானையாகிய இருதேவியர் மருங்கிருக்க மயில் வாகனத்தில் காட்சியளிப்பதாகத் தோன்றுகிறது. எங்கே நினைப்பினும் அங்கே வந்து காட்சி கொடுக்கும் அருளாளனான அப்பெருமானுடைய ஆறு திருமுகங்களிலும் உல்லாசம், நிராகுலம், யோகம், இதம், சல்லாபம், விநோதம் என்னும் ஆறு குணங்களைக் காண்கின்றார்.

உல்லாசமென்பது மனக்களிப்பு நிறைந்து விளங்கும் நிலை. ஆனந்த விளையாட்டுப்புரியும் நிலை. மயிலேறி விளையாடுவது களிநடம் புரியும் உல்லாசக் காட்சியன்றோ! அதனாலேயே **"ஏறுமயிலேறி விளையாடு முகமொன்றே"** எனக் குறிப்பிட்டார் தம் திருப்புகழில்.

நிராகுலம் என்பது கவலையற்றநிலை. கவலையைப் போக்கும் கந்தப் பெருமானின் அருள் சூரன் முதலானவரை வதைத்து உலகத்தவரின் கவலையை நீக்கியதன்றோ! **"விசனப் பொய்க் கடலுக்குக் குமரன் கைக்கணையுண்டு"** என்றும் **"கருதிக் கருதிக் கவலைப் படுவார் கவலைக் கடலைக் கடியும் வடிவேல்"** என்றும் தமிழ்க் கவிஞராகிய பாரதி கூறினார். இப்படித் துக்கமில்லாத முகத்தையே **மாறுபடு சூரரை வதைத்த முகமொன்றே"** எனக்கூறினார் அருணகிரி.

உலகவாழ்வின் ஆணும் பெண்ணும் கூடி வாழ்வதை போகம் என்பர். இறைவனையே நாயகனாக எண்ணி நம்மை நாயகியாக எண்ணி ஒன்றுபட்டிருத்தலை **யோகம்** என்பர். இதையே **"ஏகபோகமாய் நீயு நானுமாய்"** என விரும்பி வேண்டினார் அருணகிரி. சிவபெருமானுக்கு பிரணவ உப

தேசம் செய்கின்றேன் என்ற காரணமாக சிவபெருமானுடைய முகத்துடன் தான் ஒன்றுபட்ட நிலையை யோகம் என்னலாம். **"ஈசருடன் ஞானமொழி பேசுமுக மொன்றே"** என்கிறார் இந்த யோக நிலையை.

மாயத்தை வெல்வது அறிவு. வேல் என்பது அறிவின் சின்னமன்றோ! ஞானவேல் என அழைப்பர் அடியவர்கள். கிரௌஞ்சமலை என்ற மாயத்தை ஞானவேல் வீசியழித்த பெருமானன்றோ முருகன்! **"குன்றுருவவேல் வாங்கி நின்ற முகமொன்றே"** எனக் குறிப்பிட்டு இறைவன் உலகிற்குச் செய்த **ஹிதத்தைக்** குறிக்கின்றது ஒருமுகம்.

குற்றஞ்செய்தாலும் குணமாகக் கொள்ளும் **சல்லாபநிலை** யுள்ள பெருமானன்றோ ஷண்முகநாதன் !

வெறுப்பனவே செய்யுமென் சிறுமையைநின் பெருமையினால்
பொறுப்பவனே! அராப்பூண்பவனே! பொங்கு கங்கைசடைச்
செறுப்பவனே! நின்திருவருளால் என் பிறவியைவேர்
அறுப்பவனே! உடையாய்! அடியேன்உன் அடைக்கலமே!

என்பர் மணிவாசகப் பெருமான். இச்சல்லாப நிலையை **"கூறு மடியார்கள் வினை தீர்க்குமுகமொன்றே"** என்று கூறுகிறது அருணகிரி நாதரின் திருப்புகழ்!

முருகப்பெருமான் வள்ளி நாயகியின் கூந்தலைவாரி, அலங்கரித்து, நெற்றியைத்தடவி, இடையணிபுனைந்து, காலிற் சிலம் பணிவித்து, அவள் பரிசம் பட்டு மகிழ்ந்தான் என்பர் சிவப் பிரகாசர்.

கருமந்தமுநர் மனம்போல் இருள்குழல் கைபுனைந்து:
தருமந்தமுநர் உளம்போல் ஒளிர்நுதல் தைவந்து: மின்
பருமந்தழையப் பயிற்றி: பதநூ[illegible]ரம் திருத்தி
அருமந்தமெய் முழுதுந்தொட என்னே அருந்தவமே.

இதனால் முருகப்பெருமான் பெண்ணாசை கொண்ட பித்தன் என எண்ணலாகாது காமனையே எரித்த நெற்றிக் கண்ணிலிருந்து நெருப்புப் பொறியுருவாக வந்த பெருமான் காம வலைப்படவே மாட்டானென்று அறிதல் வேண்டும்! வள்ளி உண்மையான முருகபக்தையன்றோ! உண்மையன்பு கொள்வோருக்குத்தானே ஏவல் செய்யும் மனமுடையவன் முருகன். உண்மையன்புடனிருந்த வள்ளி நாயகியை அடைய

வேடன் விருத்தன் முதலான **விநோதமான** வேடங்களில் தோன்றிய அக்குணத்தைஒருமுகத்தில் காட்டுகிறான்போலும்! அதனையே **"வள்ளியை மணம் புணரவந்த முகமொன்றே"** எனக் குறித்தார் எனலாம். இவ்வாறு உல்லாச, நிராகுல, யோக, இத, சல்லாப, விநோதமான ஆறு பூரண குணங்களை யுடைய பெருமானன்றோ நீ! என முருகனைக் கேட்கின்றார் அருணை முனிவர். உல்லாசமென்பது சஞ்சலமில்லாத, சலன மில்லாத ஒரே நிலையிலுள்ள தெய்வீகத்தன்மை யென்றும், நிராகுலமென்பது கவலைக் கிடங்கொடாத வைராக்கிய நிலை மையென்றும், யோகமென்பது ஞான நிலையையும் இதமென் பது கீர்த்தியென்றும், சல்லாபமென்பது செல்வ நிலையென வும், விநோதமென்பது வீர்யமென்னும் தேஜஸையும் குறிக் கலாம். முருகா! உன்னிடம் தெய்வீகத்தன்மையும், வைராக் கியம், ஞானம். கீர்த்தி, செல்வம், வீர்யம் யாவும் பூரணமாக உள்ளன. அற்ப ஆயுளுள்ள மனிதனான என்னிடமும் இக் குணங்கள் சிறிதளவே உள்ளன. ஆனால் "நான்" "என் னுடையது" என்ற அகங்கார மமகாரங்களினால் எனக்கு அவற்றைப் பிரகாசமாகக் காட்ட இயலவில்லை. முருகா! அரைகுறையாக என்னிடமுள்ள இந்த குணங்களை நீ எடுத் துக்கொள். **நான்** தெய்வீக நிலையிலிருக்கிறேன். **என்னு டைய** வைராக்கியமும் ஞானமும், கீர்த்தியும், செல்வமும், வீரியமும், எவருக்கு உள்ளன என்ற ஆணவநிலை நீங்கிவிடும். நான் என்ற அகந்தை நீங்கிய மேலான பேரின்ப நிலையை எனக்கருளவேணும் பெருமானே! என வேண்டுகின்றார் தனது கந்தரனுபூதி இரண்டாவது பாட்டில் அருணகிரிப் பெருமான்!

உல்லாச நிராகுல யோக விதச்
சல்லாப விநோதனு நீயலை யோ?
எல்லாமற என்னை இழந்த நலம்
சொல்லாய்! முருகா! சுர பூபதியே. *(க. அனுபூதி. 2)*

நமக்கு வேலு மயிலுந்துணை யிருந்து நான் எனது என்ற அகங்கார மமகாரங்கள் நீங்க மயிலேறும் பெருமானை வணங்கி வேண்டுவோமாக!

— வெற்றிவேலுற்றதுணை —

உ
திருச்செந்திலாண்டவன் துணை

திருவாசக அநுபூதி உரை*

(சீகாழித் தாண்டவராயர் அவர்கள் இயற்றியது)

திருச்சிற்றம்பலம்

உயிருண்ணிப் பத்து

இனி, உயிருண்ணிப் பத்து:

அகத்தியச் சூத்திரம்.

> "செயலறு செயலா முயிருண்ணிப் பத்துச்
> செயிரறு சிவானந்த மேலீடாகும்"

பொழிப்புரை:— முற்பதிக அநுபூதியில், கூடாதே வாடாதே குழைந்திருப்பதான அடிமை யுல்லாச இன்ப அன்பைப்பேசி, இல்லான் போல எளிமை எய்தி, இங்கு, சொல்லும் புகழெலாம் தோத்திரமேயாகி, கரணமாய்ச் சிவமாய்க் கலந்து, என்னுயிர்ப்பலி கொள்வது அவ்வருளன்றி வேறில்லையென உண்மை சாதித்துள்ளே யழுந்தியதென அருளியது. **கலிவிருத்தமாகத் தில்லையில்** ஓதியது.

504. இனி, உயிரை விட்டுச் சிவம் பிரியாதென்ற (தி. - ன.):—

பைந்நாப்பட அரவேரல்குல் உமைபாகம தாயென்
மெய்ந்நாள்தொறும் பிரியாவினைக் கேடாவிடைப் பாகா
செந்நாவலர் பரசும்புகழ்த் திருப்பெருந்துறை யுறைவாய்
எந்நாட்களித் தெந்நாளிறு மாக்கேனி நானே.

(இ - ள்). பாம்பின் படமான குண்டலினியை அழகிய அல்குலாகவுடைய, அம்மை பாகமான ஆண்டவனே! என்னை விட்டிமைப்போதும் பிரியாது என தூழை வேரறக் கெடுத்தோய்! விடையுடையாய்! திருவருண் ஞானம் பெற்றோர் புகழும் திருப்பெருந்துறைப்பதியே! என்காலம் இனி வீணாட்படக் களித்து இறுமாப்பனோ? நாதனே! என அருளியதைக் காண்க.

---

* இவ்வரிய நூலைப் பதிப்பித்த சென்னை—திருவான்மியூர், மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்கள் நூல் நிலையத்தாரின் அனுமதிபெற்று இது வெளியிடப் பெறுகின்றது. இதன் விலை ரூ. 13/- ஷை நூல் நிலையத்தில் கிடைக்கும், 20% கழிவு உண்டு.

உ

முருகா

திருப்பனந்தாள் ஸ்ரீகாசிமடத்து அதிபர், ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் 3—3—68ல் இராமேச்சுரத்திற்கு எழுந்தருளியகாலை, இராமேச்சுரம் அரசினர் உயர்நிலைப்பள்ளித் தமிழாசிரியர், சைவநன்மணி,

வித்துவான், திரு. க. சேதுராமலிங்கன் அவர்கள்

வாசித்துச் சமர்பித்த

துதிப் பாமாலை.

---

1) நல்லசிவன் எந்தை நயந்த தவமுனியே !
நல்ல தமிழ்ச்சுவைதேர் நாவலனே ! — சொல்லரிய,
பற்பலவாம் தர்மங்கள் பாங்குடனே செய்துமகிழ்
நற்றவனே ! வாழ்க ! நயந்து.

2) கொடைமடத்திற் சிறந்தொளிரும் பாரி பேகன்
குறித்ததலைக் குமணனென முன்னர் வாழ்ந்தார்;
கொடைமடத்தில் இன்றவர்தம் வழியில் வந்து
குலவுமெங்கள் அருள்நந்தி வாழ்க ! வாழ்க !
தடையில்லாக் கொடையுடையாய் ! தவஞ்சேர் தேவே !
தமிழகத்தில் துறவுக்கோர் எடுத்துக் காட்டே !
சடையுடையான் விடையுடையான் மலர்த்தாள் ஏத்தும்
சால்புடையாய் ! அருளரசே ! வாழ்க ! வாழ்க !

3) பிறவிக் கடல்கடத்தும் பிஞ்ஞகன்தாள் என்றும்
மறவாமல் ஏத்திமகிழ் மன்னு ! — துறவின்
இலக்கணமே ! ஞானத் திருப்பீடமே ! என்றும்
நலமுடனே வாழ்க நயந்து,

4) எண்ணிலாத் தர்மங்கள் இயற்றி வாழ்வாய்!
எண்ணிலா நூல்கள்பல ஈந்து வாழ்வாய்!
கண்ணிலான் துயரகல கண்கள் நல்கக்
கல்விதரு பலநிலையம் அமைத்து வாழ்வாய்!
எண்ணரிய துயரூட்டும் பசியைப் போக்க
எங்கெங்கும் நல்லன்ன தானம் செய்வாய்!
கண்ணுதலே! தவமுனியே! கலையின் வாழ்வே!
கருணையுளாய்! அருள்நந்தி மலர்த்தாள் போற்றி!

5) குமரகுரு வழிவந்த கோதி லாதாய்!
கொற்றவனே! நற்றவனே! போற்றி போற்றி
அமரரென வாழ்சாமி நாத வள்ளல்
அகமகிழும் அருந்தவனே! போற்றி போற்றி
குமரகுரு தன்பெயராற் கல்விக் கூடம்
குலவுமொரு கலைக்கோயில் கண்டாய்! போற்றி
பமரம்சூழ் நற்கொன்றைத் தாரான் தாள்கள்
பக்தியுடன் ஏத்திமகிழ் குருவே! போற்றி.

6) காசிமுதல் குமரிவரை கணக்கி லாத
கவின்மிகுநல் லறங்கள்பல அமைத்தாய்! போற்றி
மாசிலாத் தவமுனியே! போற்றி போற்றி
மாதவனே அருள்நந்தி! மலர்த்தாள் போற்றி
பேசருநற் குணங்கள்பல பெற்றாய்! போற்றி
பெறற்கரிய பெரும்புகழை யுற்றாய்! போற்றி
மாசடையன் திருமுன்னர் மனங்க சிந்து
வாயாரப் பாடிமகிழ் வாழ்வே! போற்றி.

"ஞானசம்பந்தம்"

அரிய கட்டுரைகளுடன் வெளிவரும் திங்கள் வெளியீடு

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்திலிருந்து வெளி வருகிறது, சமயப்பொருள் முதலியவை குறித்த தெளிவான கட்டுரைகள் அடங்கியது. சைவ சமயத்தின் உண்மைகளை உணர்வதற்குப் பெருந்துணையானது. சந்தாத்தொகையைக் கீழ்க்கண்ட முகவரிக்கே அனுப்பி வைக்கவும்

ஆண்டுக் கையொப்பம்,

உள்நாடு ரூ. 3-00 * வெளிநாடு ரூ. 4-00

செயலாளர், "ஞானசம்பந்தம்" அச்சகம்,
தருமபுரம். மாயூரம் P. O.

திருச்செந்தூரில் ஸ்ரீ ருத்ராத்தியயன பட்டர்
படிக்காசு நிதி ரூ. 3000/-

'உருத்திரன் என்னும் நாமம் செந்தீப்பண்ணவன் தனக்கும்ஆமால்' என்ற கந்தபுராணத்தின்படி படைத்துக் காத்து அழித்து மறைத்து அளிக்கும் சிவபெருமானேயே உருத்திரன் என்ற சொல் குறிக்கும். 'இன்னலங் கடலுட் பட்டோர் யாரையும் எடுக்கு நீரால் உன்னரும் பரமமூர்த்தி உருத்திரன் எனும் பேர் பெற்றான்' என்பதும் கந்தபுராணம். 'இடும்பை என்ப தோட்டு இயல்பின் உருத்திரன்' என்பது காஞ்சிப் புராணம்.

'ஸர்வோவைருத்ர — ருத்ராயநமோ அஸ்து' என்று கிருஷ்ண யசுர் வேதமும்,

> **'ருத்ரோ ப்ரஹ்மா, உமா வாணி........**
> **ருத்ரோ விஷ்ணுர், உமா லக்ஷ்மீ........**
> **ருத்ர சூரிய, உமாசாயா........**
> **ருத்ரோ அர்த்த, அட்சர ஸஉமா........'**

என்ற உருத்திர ரகச்யோபநிஷத்தில் 'எல்லாம் ஆக விளங்கு பவர் ருத்ரபரமேசுவரன்' என்று கூறப்பட்டுள்ளது.

நான்கு வேதங்களும் வேள்வி வாயிலாக உருத்திரபரமே சுவரனை வழிபடும் முறையை விதிக்கின்றன. ஆகவே நான்கு வேதங்களிலேயும் உருத்திர மந்திரங்கள் காணப்படுகின்றன.

இருக்குவேதத்தில் ஐந்து உருத்திரங்கள் உள்ளன. அவற்றுள் 43 இருக்குகள் உள.

சாமவேத உருத்திரத்தில் 11 மந்திரங்கள் உள்ளன. 'ஆவோ ராஜா' என்பது முதன்மந்திரம். இப்பதினொரு மந்தி ரங்களும் உருத்திரசம்ஹிதை எனப்பெறும்.

அதர்வண வேதத்தில் 75 உருத்திரமந்திரங்கள் உள்ளன.

யசுர் வேதத்தில் சருத்திரம் என்ற பகுதி, நான்காம் காண்டத்தில் ஐந்தாம் பிரபாடகத்தில், பதினொரு அனுவாகங் களாக உள்ளது. இது சத்ருத்ரீயம் என்றும் உருத்திராத் யாயம் என்றும் கூறப்படும்.

'தேவர்களுள் உருத்திர பரமேசுவரனைப் போலவும், புராணங்களுள் கந்தபுராணம் போலவும், ஸ்மிருதிகளுள் மனு ஸ்மிருதி போலவும், வேதத்தில் சதருத்ரீயம் சிறந்து விளங்கு கிறது' என்று வித்யாரண்யமுனிவர் உருத்திரகல்பம் எனும் நூலுள் கூறியுள்ளார். கைவல்ய உபநிடதம் 'சதருத்ரீயத்தால் முத்தியாம்' என்று கூறுகிறது.

இச்சதருத்ரீயத்தில் பிரபாடகம் 5, அநுவாகம் 8-ல், பதி ஞேராவது மந்திரம் **நமசிவாயச** என்பது எனவே சிவநாமம் வேதத்தின் இருதயமாகக் கருதப்படும் உருத்திர மந்திரங்களின் கருவில் இருப்பது அதற்குரிய தனிச்சிறப்பாகும். வேத புரு ஷர்க்கு ஸ்ரீ ருத்ரம் கண்ணும் அதனுள் இருக்கும் பஞ்சாட் சரம், கண்மணியுமாம்.

இது உருத்திரம், உருத்திர ஏகாதசனி, ஸ்ரீ ருத்ரம், மகா ருத்ரம், அதி ருத்ரம் என ஐந்து வகைப்படும்.

அறுபான் மும்மைநாயன்மார்களில் ஒருவர் உருத்திரபசு பதியார் என்பவர், இவர் திருத்தலையூர் என்ற தலத்தில் வாழ்ந்த மறையவர். சிவனடிமைத் திறம்பூண்டவர். பசு பதியார் என்ற இயற்பெயரினர். இவர் பொய்கையை யடைந்து கழுத்தளவு நீரில் நின்று கைஉச்சிமேல் குவித்துச் சிவபிரா னிடத்து அன்புபூண்டு உருத்திரத்தை இடையீடின்றி ஓது வார். 'அருமறைப்பயனாகிய உருத்திரம் அதனை' இரவும் பக லும் ஓதியமையின் உமையொருபாகனுர் உவந்தருளிச் சிவ புரியில் தன்னடிக்கீழ் இவரைச் சேர்ப்பித்துக்கொண்டார்.

ஸ்ரீ ருத்ரம் ஓதியவர் சிவலோகத்தில் வீற்றிருப்பர். 'மறை களின் சதவுருத்திர மந்திரம் நவின்ருேர் .... இவர்' என்ற திருவிளையாடற்புராணத்தில் வரகுணனுக்குச் சிவலோகம் காட்டிய படலத்திலும் 'நண்ணுசீர் உருத்திரத்தை .... இயம்புவோன் நிரயம் எய்தான்' என்று சேதுபுராணத்திலும் சொல்லி இருக்கிறது.

இத்தகைய சிறப்புடைய ஸ்ரீ ருத்ரத்தை, ஸ்ரீ குமரகுருபர சுவாமிகளுக்குத் திருவருள் பாலித்தருளிய ஸ்ரீ செந்திலாண்ட வன் திருமுன்னர் உதயமார்த்தாண்ட அபிஷேக காலத்தில் நாடோறும் ஓதிவரும் இரு அந்தணர்களுக்குப் படிக்காசு

அளித்தற்பொருட்டுத் திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து அதிபர் **ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களால்** இத்தருமம் நிறுவப்பெற்றது. இது 'திருச்செந்தூரில் ஸ்ரீ ருத்ராத்தியயன பட்டர் படிக்காசு நிதி' எனப் பெறும்.

2. இதற்குரிய முதற்பொருள் ரூ. 3000/- / ரூபா மூவாயிரம்/ இது ஆண்டொன்றுக்கு 7% வட்டி தரக்கூடிய முதலீடாகக் கும்பகோணம் ஸ்டேட் பாங்கில் 60 மாதங்களுக்கு முதலீடு செய்யப்பெற்றுள்ளது. பிக்சட் டிபாஸிட் தேதி 16—2—1968. இது நம்மாலும் நமக்குப்பின் உரிமையுள்ளவர்களாலும் பரிபாலிக்கப்பெற்றுவரும்.

3. நம்மால் தருமக்கட்டளைகள் நிறுவப்பெற்று (1) ஸ்ரீ செந்திலாண்டவன் அன்னதானக்கட்டளையினின்று நான்கு ஆண்டுகட்கு ஒருமுறை உதவி மூலதனம் நிறுவி, அதினின்று ஆண்டுதோறும் திருச்செந்தூர் உயர்நிலைப்பள்ளியில் கல்விகற்கும் மாணவிகளுக்கு உதவித்தொகையளித்தலும் (2) தேவாரப்பரிசு நிதியின்கீழ் தேவாரப்பரிசு அளித்தலும் (3) நீதிநெறி விளக்கப் பரிசுநிதியின்படி பரிசு அளித்தலும் (4) ஸ்ரீ குமரகுருபரசுவாமிகள் நினைவில் எஸ். எஸ். எல். சி. தேர்ச்சிபெற்ற முதன் மாணவருக்குப் பரிசு அளித்தலும், (5) ஆவணி மூல நாளில் திரிசுதந்திரருக்கு அன்னம்பாலிப்பும் (6) வைகாசி அமரபக்ஷம் திருதியையில் ஸ்ரீ குமரகுருபரசுவாமிகள் நினைவு நாளில் அன்னம்பாலிப்பும் (7) கந்தர்சஷ்டி நாளுக்கு மறுநாள் அந்தணர் அருந்தவர் ஏழைகளுக்கு அன்னம்பாலிப்பும் (8) சித்திரை வைகாசி மாதங்களில் புனற்பந்தரும் (9) கோசம்வர்த்தன நிதியின்படி தேவஸ்தானத்தில் பசுக்கள் வாங்கிப் பராமரித்தலும் (10) காசிவாசம் செய்யத் திரிசுதந்திரருக்கு உதவியளித்தலும் (11) ஐக்கிய வேளாளர் சங்க படிப்பக நிதியின்கீழ் உதவியளித்தலும் (12) ஸ்ரீ குமரகுருபரசுவாமிகள் நித்திய மகேசுவர பூசையும் (13) நாடோறும் கந்தர்கலி வெண்பா பாராயணம் செய்வித்தலும் (14) திருச்செந்தூர் ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி நித்தியப்படி கட்டளையும் நடைபெற்று வருகின்றது.

4. அ. மேற்கண்ட தருமங்கள் நம்மால் நடத்தப்பெறுவது போன்றே, இம்முதற்பொருளினின்று வரும் வட்டித்

தொகையில் நிர்வாகச் செலவுகள் போக எஞ்சியுள்ள தொகை முழுவதும் திருச்செந்தூரில் ஸ்ரீ செந்திலாண்டவர் திருமுன்னர் நாடோறும் உதயமார்த்தாண்ட அபிஷேக காலத்தில் ஸ்ரீ ருத்ரம் பாராயணம் செய்யும் இரு பட்டர்களுக்கு / முக்காணியர் அல்லது சாஸ்திரிகளுக்கு / படிக்காசு அளிக்கப் பெற்று வரும்.

ஆ. ஸ்ரீ ருத்ரபாராயணம் செய்யும் பட்டர், அதாவது முக்காணியர் அல்லது சாஸ்திரிகள் இருவர் நாடோறும் உதய மார்த்தாண்ட அபிஷேக காலத்தில் திருச்செந்தூரில் ஸ்ரீ செந்திலாண்டவன் திருமுன் ஸ்ரீ ருத்ரபாராயணம் செய்ததாக ஷை தேவஸ்தான நிர்வாக அதிகாரியிடமிருந்து மாதந்தோறும் அத்தாட்சி பெற்று அனுப்புவித்தால் ஸ்ரீ ருத்ரபாராயணம் செய்த நாட்களுக்கு மட்டும் நாளொன்றுக்கு நபர் ஒன்றுக்கு ரூ. 0-25 இருபத்தைந்து பைசே வீதம் கூடுதல் தொகை அவ்விருவருக்கு மட்டும் தனித்தனி மணியார்டர் செய்யப்பெறும்.

இ. ஷை ஸ்ரீ ருத்ரபாராயணம் செய்பவர் ஸ்ரீ ருத்ரபாராயணம் செய்வதற்காகத் தேவஸ்தானத்தில் இதுவரையில் பெற்றுவரும் ஊதியத்தை இனியும் பெற்றுக்கொள்ளலாம்.

5. ஷை படிக்காசுத் தொகை வட்டி வரவுக்கு ஏற்பக் குறைக்கவும் கூட்டவும் பெறும். இவ்வட்டி வருமானம் வேறு எம்முறையிலும் மாற்றியமைக்கப்பெறமாட்டாது. இதற்குரிய முதற்பொருள் திரும்பியளிக்கப்பெறின் அதிக வட்டி தரக்கூடிய அரசியல் கடன்தாள்களிலோ அல்லது நிலையான முதலீடுகளிலோ முதலீடு செய்யப்பெறும். இம்முதற்பொருள் நம்பேரிலும் நமக்குப்பின் உரிமையுள்ளவர்கள் பேரிலும் இருந்துவரும்.

நமசிவாயசசிவதராயச - / ஸ்ரீ ருத்ரம் /

Tirupanandal
Dated 16-2-1968 } (Sd.) *Kasivasi Arulnandi Tambiran*

The above document has been registered at Tiruvadamarudhur Sub-Registrar's office, on 17-2-1968 as No. 10 of 1968, Book No. 4, volume 54, pages 209 to 212.

கலைக்கோயிலில் வரப்பெற்றுக் கொண்ட புத்தகங்களின் விபரம் (தொடர்ச்சி)

தொடர் எண்	புத்தகத்தின் பெயர்	ஆசிரியர் பெயர்
11344	Historical Tamil Reader	By P. S. Subramania Sastri. M. A., Ph D Retired Professor of Sanskrit, Annamalai University.
11345	பராபவ வருஷவாக்கியப் பஞ்சாங்கம்	
11346-47	திருப்பூந்துருத்தி தல வரலாறும் வாரவழிபாட்டு துதிமலரும்	வாரவழிபாட்டுக் கழகம், திருப்பூந்துருத்தி
11348-49	பட்டினத்தார் அருளிய திருக்கழுமல மும்மணிக் கோவை	தருமையாதீனம்
11350	பண்டாரச் சாத்திரம் - நமச்சிவாயமாலை	திருவாவடுதுறை ஆதீனம்
11351	ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் கலைக்கல்லூரி 1962-63 College Annual Vol. II	
11352	ஞானகுரு 33வது ஆண்டு சிறப்புமலர்	ஆசிரியர் அத்யாத்மரத்ன S. G. இராமலிங்கம் B. A., தலைவர், ஞானகுரு பயிற்சி சங்கம், மதுரை–9.
11353	தில்லைவனம்	தருமையாதீனம்
11354	ஸ்ரீஸௌந்தர விநாயக ஸுப்ரபாதஸ்துதி	இயற்றியவர். தாரமங்கலம் ப்ரும்மஸ்ரீ S. சுப்பிரமணிய சாஸ்திரிகள்.

11355	புதுப்பாளையம் பழந்தமிழ்ப்புலவர் ப. மாசிலாமணி முதலியார் வரலாறு நினைவுமலர்	வெளியிட்டவர் பு. மா. ஜயசெந்தில்நாதன் தமிழாசிரியர், பச்சையப்பன் உயர்நிலைப் பள்ளி, காஞ்சீபுரம்
11356	பிடித்தபத்து (திருவாசகம்)	உரையாசிரியர். ஐ. சிவலிங்கம் பிள்ளை, நடுத்தெரு, காரைநகர்
11357	ஸ்ரீ முருகநிலையம் அடியார் திருக்கூட்டம் 9வது ஆண்டு நிறைவுவிழாமலர்	
11358	ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி தேவஸ்தானம் திருச்செந்தூர் 1967–1968 திருக்கோயில் விசேஷங்களின் நாட்குறிப்பு	தேவஸ்த்தான வெளியீடு
11359	தினமணிக்கதிர் தீபாவளிமலர் 1967	
11360, 61, 62, 63	பண்டார சாத்திரம்	திருவாவடுதுறை ஆதீனவெளியீடு
11364	சேக்கிழார் பிள்ளைத்தமிழ்	உரை ஆசிரியர்: கு. சுந்தரமூர்த்தி, திருப்பனந்தாள்
11365	சிவஞானபோதம்–உரை	ஆசிரியர் ஜி. வரதராஜன்
11366	நூறாயிரம் திருவிளக்குப் பெருவிழா மலர்	சென்னை ஸ்ரீ கபாலீஸ்வரர் திருக்கோயில் வெளியீடு
11367, 68	ஆளுடையபிள்ளையார் மும்மணிக்கோவை	தருமைஆதீனம் வெளியீடு –
11369	திருமுருகாற்றுப்படை	உரை ஆசிரியர் வித்துவான் தி. பட்டுசாமி ஓதுவார்

(தொடரும்)